பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை (14.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 321

# இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இராஜதந்திர முறுகல்!

## மஹிந்தாவின் சீற்றத்தால் புதுடில்லியில் அதிருப்தி



கொழும்பு, ஒக்ரோபர் 14

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பான விவகாரத்தை ஒட்டி கொழும்பு, புதுடில்லி ஆட்சித் தலைமைகள் இடையே எழுந்துள்ள இராஜதந்திர முறுகல் வலுத்திருப்பதாக விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசிந்திருக்கின்றன.

இவ்விவகாரத்தை ஒட்டி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீற்றத்தோடு வெளியிட்ட சில கருத்துகள் புதுடில்லித் தலைமையை அதிருப்திக்குள் ஆழ்த்தியிருக்கின்றன எனவும் தெரியவருகின்றது. (16 ஆம் பக்கம் பார்க்க)



## முகமாலை, நாகர்கோவிலில் பரவலாக கடும் மோதல்கள்

கொழும்பு,ஒக்.14

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முன்னரங்க நிலைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பரவலான சமர்களில் இராணுவத்தினர் ஆறு பேர் உயிரிழந்தனர் என்றும் 21 பேர் படுகாயமடைந்தனர் என்றும் படைத் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

யாழ். முகமாலை, நாகர்கோவில் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமரில் விடுதலைப்புலிகள் நால்வர் உயிரிழந்தனர் என்றும் தமது தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்றும் எட்டுப்பேர் வரை படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப் (16 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் இடம்பெயர்ந்து தவிக்கும் மக்களுக்கு மிகவும் அவசர அவசியமானது பாதுகாப்பே!

## செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு சுட்டிக்காட்டுகிறது

கொழும்பு, ஒக். 14

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உணவு, குடிதண்ணீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு மேலாகப் பாதுகாப்பே அவசரமான அவசியமான தேவையாக உள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதிஅந்தோனி டேல்ஸியல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் மாதாந்த அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பருவ மழைக் காலம் நெருங்கி வருவதால், ஏற்படக் கூடிய மலேரியா மற்றும் நீரால் பரவும் நோய்கள் தொடர்பான சுகாதார நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும், கூறப்பட்டிருப்பவை வருமாறு-

(16 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு அரச உணவுப்பொருள் ஏற்றிச்சென்ற வாகனங்களின் பயணம் தடைப்பட்டது

## பாலம் சேதமுற்றதால் 3 லொறிகள் மட்டுமே உள்ளே!

வவுனியா, ஒக்.14

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் கொண்டு செல்லப்பட்ட உணவு லொறிகளில் பெரும்பாலான லொறிகள் புளியங்குளத்தில் தரித்து நிற்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

புளியங்குளம் சந்தியில் இருந்து நெடுங்கேணி நோக்கிச் செல்லும் வீதியில் உள்ள பாலம் ஒன்று சேதமடைந்துள்ளதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்திருக்கிறார்.

நேற்று நண்பகல் 20 லொறிகளில் உணவுப் பொருள்கள் ஏற்றிச்செல்லப்பட்டன. அவற்றில் மூன்று லொறிகள் மட்டும் சேதமடைந்த பாலத்தைக் கடந்து உள்ளே சென்றன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கடற்படையால் பத்து தமிழ் இளைஞர்கள் கைது

திருகோணமலை, ஒக். 14

திருகோணமலை, மணையவெளிப் பகுதியில் கடற்படையினர் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 10 தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் தலைமையகத்திற்கு அண்மித்த பகுதியிலேயே இச்சுற (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதை விவகாரத்தால்

# உலக உணவுத் திட்ட வாகன அணி வன்னி செல்வதில் தடங்கல் நிலை!

வவுனியா ஒக். 14

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவுப்பொருள்களை எடுத்துச் செல்லும் வாகனத் தொடரணி நெடுங்கேணியூடாக மட்டுமே செல்ல முடியும் என்று அரசு தெரிவித்த யோசனைக்கு உலக உணவுத்திட்டம்இன்னமும்உடன்படவில்லை.

வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான நிவாரணப் பொருள்களை ஏ-9 வீதியூடாக உலக உணவுத்திட்ட நிறுவனம் எடுத்துச் சென்று விநியோகித்து வந்தது.

யுத்த நிலை காரணமாக இந்த வாகன அணி மாங்குளம்-ஒட்டுசுட்டான் ஊடாகச் செல்ல அரசு அனுமதி வழங்கியது.

இதன்படி 51 லொறிகளில் உணவுப் பொருள்களை எடுத்து சென்று மக்களுக்கு அந்த நிறுவனம் விநியோகித்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# மின் வெட்டு இன்று தொடக்கம் 30 நிமிட நேரமாக குறைககப்படும்?

யாழ்ப்பாணம், ஒக். 14

குடாநாட்டில் இப்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் மின்வெட்டு நேரத்தை அரை மணி நேரமாகக் குறைக்க ஏற்பாடாகி உள்ளது. அதற்கு முன்னோடியாக மின்வெட்டைக் குறைக்க ஏதுவாக பரீட்சார்த்தச் செயற்பாடு நேற்றிரவு மின்சார சபையால் முன்னெடுக்கப்பட்டது.

மின்வெட்டு நேரத்தைக் குறைப்பது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் பலாலியில் நடைபெற்றது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# கருணா கட்சியின் ஆயுத அணியிலிருந்து 300 பேர் இராணுவத்தில் இணைக்கப்படுவர்

கொழும்பு, ஒக்.14

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆயுதப்பிரிவு உறுப்பினர்கள் 300 பேர் இராணுவத்தில் இணைந்து கொள்ளவிருக்கின்றனர் என்று அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

சிங்கள் [illegible] ஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பட்டமளிப்பு விழாவுக்கு செல்லும் மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக். 14

உயர்தொழில்நுட்ப நிறுவன பட்டமளிப்பு விழாவிற்கு கொழும்புக்கு செல்லவிருக்கும் மாணவர்கள் தமது பயண அனுமதியினை தத்தமது சிவில் நிர்வாக காரியாலயங் களில் பெற்றுக் கொள்வதுடன், முத்திரை அளவிலான தங்களது புகைப்படத்தினை எதிர்வரும் சனிக்கிழமை மேற்படி நிறுவனத்தில் சமர்ப்பித்து தமது பதிவினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (201)

## பத்திரிசியார் கல்லூரி வணிக தினம் நாளை

யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி வணிக மாணவர் ஒன்றியத்தினரின் வணிக தினமும் "தேறல் - மலர் 5" வெளியீடும் நாளை நடைபெற உள்ளய.

கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் நாளை காலை 9.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகும். விழாவில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் என். வன்னியசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நூல் அறிமுக உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.பாலபுத்திரன் நிகழ்த்துவார். (1)


**வாடகைக்கு**

முதலாம் குறுக்குத் தெரு, வேம்படிச் சந்தியில் கடையுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: சீ.சிவராசா

இல.4, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.


# வேலைக்குச் சென்று திரும்பிய இளைஞர் வழிமறித்து சுட்டுக்கொலை

## அளவெட்டியில் திங்கள் மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.14

அளவெட்டிப் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கல்லூரி வீதி, இளவாலையைச் சேர்ந்த தர்மராஜா கோபிநாத் (வயது-20) என்ற இளைஞரே ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் வேறு இருவருடன் கூலிவேலைமுடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில், இரவு 7 மணியளவில் அளவெட்டி, டச்சு வீதியில் அவர்களை வழிமறித்த இனந்தெரியாத ஆயுததாரிகள் குறித்த இளைஞரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுடப்பட்ட இளைஞர் அந்த இடத்திலேயே மரணமானதாகவும் மற்ற இருவரும் தப்பிச் சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டது.

நேற்று சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (50)

# தமிழக மீனவர்கள் 6 பேர் திருமலைக் கடலில் மீட்பு

கொழும்பு, ஒக்.14

திருகோணமலை ஆழ்கடல் பகுதியில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த 6 தமிழக மீனவர்கள் இலங்கை மீனவர்களால் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்.

சென்னையைச் சேர்ந்த 6 மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க வந்தவேளை இவர்களின் இயந்திரப் படகு பழுதடைந்ததையடுத்து கடந்த 30 நாள்களாக ஆழ்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தனர் என்று கூறப்பட்டது. கடலில் மீன்பிடிக்கச் சென்ற திருகோணமலை மீனவர்கள் இவர்கள் 6 பேரையும் காப்பாற்றி கடந்த ஞாயிறன்று கரைசேர்த் தனர்.

குறிப்பிட்ட 6 பேரும் திருகோணமலை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதனையடுத்து கடற்படையினரால் திருகோணமலைப் பொலிஸாரிடம் இவர்கள் கையளிக்கப்பட்டனர்.

திருகோணமலை நீதிமன்றில் 6 பேரும் ஆஜர்செய்யப்பட்டபோது இவர்கள் அனைவரையும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் ஊடாக இந்தியத் தூதர்க அதிகாரிகளிடம் கைளிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. திருகோண மலை பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் பாதுகாப்பில் இவர் கள் 6 பேரும் தடுத்து வைக்கப் பட் டிருக்கின்றனர்.

## குடத்தனை பாடசாலை தரம் உயர்த்தப்பட்டது

மந்திகை, ஒக். 14

வடமராட்சி கிழக்கு குடத்தனை கரையூர் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் ஆர்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து இந்தப் பாடசாலை, பாடசாலை வகை 2 எனத் தரமுயர்த்தப்படுவதோடு இப் பாடசாலையில் தரம் 10, 11 வகுப்புகளை ஆரம்பிக்க அனுமதியளிக் கப்பட்டுள்ளதாகவும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப் பிரதேச மக்கள் இப் பாடசாலையைத் தரம் உயர்த்துமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சைக் கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (204-218)

## ஆசிரியர் தின விழாவும் சிறுவர் தின விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.14

விளைவேலி ஐயனார் ஆலயத்தினர் நடத்தும் அறநெறிப்பாடசாலையின் ஆசிரியர் தின விழாவும், சிறுவர் தின விழாவும் இன்று மாலை 3 மணிக்கு மேற்படி ஆலய மண் டபத்தில் ஆலய தர்மகர்த்தா சு.சிவானந்தன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராசமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் க.தர்மராசாவும் கலந்து கொள்வர். (201-323)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 05 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பிள்ளைகளை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

1. செல்வன் சிவசங்கர் நீரஜன் - 156
2. செல்வன் மகேஸ்வரன் மதுமிதன் - 136
3. செல்வி சர்வேஸ்வரன் திவிஷா - 136
4. செல்வன் ஸ்ரீதரன் ராம்சந்தர் - 126
5. செல்வன் அழகேஸ்வரன் ராஜ்மேனன் - 123
6. செல்வன் இராஜரஞ்சன் ஜனுசன் - 121
7. செல்வி கௌதமன் சினேகா - 114

தமிழ் மன்றக் கல்விக் கழகம், வதிரி.


**தேவை**

தகரப் பந்தல் - 40 அடி நீளமுள்ளது உடன் தேவை, ஸ்ரீராம் கொண்டா, 650Kw மின் பிறப்பாக்கியும் தேவை - (விற்பனை மூலமாக)

தொடர்பு:
021 4591968, 0776630390

**வீடு வாடகைக்கு**

கதீற்றல் வீதியில் மேல்மாடி வீட்டில் 5 அறைகள் கொண்ட கீழ்ப்பகுதி வாடகைக்கு விடப்படும். N.G.O. விற்கும் ஏற்றது.
தொடர்பு: 10A. கதீற்றல் லேன், யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2225687

**விற்பனைக்கு**

EN மொடல் A 50 கேம்பிறிஜ் கார் நியாய விலைக்கு விற்பனைக்குண்டு.
இல: 626/5, K.K.S வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம், தொடர்பு:- 077 6701481

**அச்சகத்திற்கு ஆள்கள் தேவை**

ஒவ்செற் மெசின் ஒப்பறேற்ரர், கணனி இயக்குனர், புத்தகம் கட்டுபவர் தேவை நேரில் வரவும்.
எஸ்.எஸ்.ஆர். பிறிண்டேர்ஸ்
72, பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி
[கபில் ஸ்ருடியோவுக்கு அருகில்] T.P 077165589

மாபெரும் தீபாவளி கொண்டாட்டத்தை முன்னிட்டு

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான துரித தபால்கள் .பொதிகள் சேவை

FedEx Express

(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா விதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

MMBL Money Master

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18 ★ 01 ★ 1944



மறைவு 19 ★ 09 ★ 2005

### அமரர் குமாரவேலு சுப்பிரமணியம்

(நாயகிஸ் புரடெக்ஸ் உரிமையாளர்)

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து
எமது இல்லத்தின் பொறுப்பாய் இருந்தீரே
இன்முகங் காட்டி எல்லோருடனும் நேசமாய்ப் பழகி
உற்ற நேரத்தில் உதவிகள் பல செய்து
என்றும் நல்லவராய் இன்சொல் பேசி மகிழ்ந்தீரே
மூன்றாண்டென்ன ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறாதுஎம்துயரம்
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனின் திருப்பாதங்களை
பிரார்த்தித்து நிற்கின்றோம்

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### பரமசிவம் கணேசன் (ஆச்சாரியார்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசிவம் கணேசன் (ஆச்சாரியார்) 12.10.2008 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.16, பிரப்பங் குளம் வீதி,
யாழ்ப்பாணம். (78068)

தகவல்:
சகோதரர்கள்.

## அருணோதயாவில் சாதனை மாணவர் கௌரவிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 14

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் சாதனை மாணவர் கௌரவிப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (1)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 06.07.1962
மறைவு: 18.07.2008
திதி: பூரணை

### அமரர் முத்துத்தம்பி ஜெயராசா (ஜெயபால்)

90 நாள் என்ன 90 மாதம் போனாலும் மாறாது
எங்கள் துயரம் எங்கள் உயிரின் உயிரே
எங்கு சென்றாய் எம்மை பிரிந்து
வலியும் வேதனையும் தாங்கிய
எம் இதயத்தால் தாங்கமுடியவில்லையே
உங்கள் பிரிவை
மௌனம் என்னும் மொழியில்
உங்களுடன் நித்தமும் எங்கள்
கண்ணீர் தான் பேசுகின்றதே

காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

உன் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.
(மு.தனபாலசிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழக மக்களின் விருப்புக்கு மாறாகவே புலிகள் மீதான தடை இந்தியாவில் நீடிப்பு

தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்கு - விடுதலைப் புலிகளுக்கு - ஆதரவு அலை அள்ளி வீசுவதை முன்னணி ஆங்கில ஏடான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' அம்பலப்படுத்தியிருக்கின்றது.

இலங்கை விடயத்தில் - புலிகள் விவகாரத்தில் - புதுடில்லியின் சிந்தனை எத்தகைய அதிகார வெறித்தனத்துடனும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் மக்கள் அலை புலிகள் பக்கம் - ஈழத் தமிழர் சார்பாக - பெருமெடுப்பில் அடிக்கத் தொடங்கிவிட்டது என்பதே கள நிலைவரமாகும்; யதார்த்தப் புறநிலையாகும்.

இந்த மக்கள் அலையை உதாசீனப்படுத்திவிட்டு தமிழக அரசோ, புதுடில்லி ஆட்சிப்பீடமோ இனிமேலும் கொழும்பு சிங்கள அரசுக்கு 'ஜல்ரா' போடும் பொறுப்பற்ற போக்கில் செயற்பட முடியாது.

அதுவும், இந்தா, அந்தா என்று இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் எவ்வேளையிலும் நடக்கலாம் என்ற சூழ்நிலை நிலவுகையில் -

நாற்பது நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிகளைக் கொண்ட தமிழகத்தில் மக்கள் கருத்தைப் புண்படுத்தி, புறமொதுக்கி அரசுத் தலைமைகள் - அவை மாநில அரசுகளாகவோ அல்லது மத்திய அரசுகளாகவோ இருந்துவிட்டுப் போகட்டும் - நடந்து கொள்ள முடியாது என்பதுதான் உண்மையான புறநிலையாகும்; காலத்தின் கட்டாயமும் அதுதான்.

இவ்விவகாரத்தில் தமிழக மக்களின் கருத்து நிலைப்பாடு என்னவென்பதை இந்தியாவின் பிரபல ஊடக அமைப்புகள் அம்பலப்படுத்தி வருகின்றன. அதன் அடிப்படையில் - மக்களின் கருத்து நிலைப்பாடுகளை உள்வாங்கி - அவற்றுக்கு ஏற்ப தங்களின் போக்குகளையும், செயற்பாடுகளையும் வகுக்க வேண்டியனவாக இந்திய அரசியல் தலைமைகள் உள்ளன.

இப்போது தமிழக மக்கள் மத்தியில் கருத்து நிலைப்பாட்டைச் சேகரித்து அந்த மக்களின் மனக்கணிப்பை வெளியிட்டிருக்கும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' தமிழகத்தில் மட்டுமல்லாமல் முழு இந்தியாவிலும் மதிப்புக்குரிய ஒரு ஊடகமாகும். தமிழகத்தின் பத்து பிரதான நகரங்களில் மக்களின் கணிப்பைப் பெற்று அதைக் கருத்துக் கணிப்பாக வெளியிட்டிருக்கிறது 'எக்ஸ்பிரஸ்'.

அதன்படி தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா அடியோடு நீக்கவேண்டும் என்று தமிழகத்தில் 51 வீதமானோர் - அரைவாசிக்கு மேற்பட்டோர் - விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

அதேசமயம் இந்த விடயத்தில் எதுவும் சொல்ல முடியவில்லை என்ற கருத்தை 26 வீதத் தமிழகத்தவர்கள் வெளியிட்டிருக்கின்றனர்.

ஆக, தமிழக மக்களில் 15 வீதத்தினரே புலிகள் மீதான தடையை இப்போதைக்கு நீக்கக் கூடாது என்றும் -

மிகுதி எட்டு வீதத்தினரே புலிகள் மீதான தடையை எப்போதும் நீக்கக்கூடாது என்றும் - கூறியிருக்கின்றார்கள்.

இதன்படி பார்த்தால் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாது என்று தமிழகத்தில் உள்ள மக்களில் ஆக 23 வீதத்தினரே கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

'இந்தியன் எக்ஸ்பிரஸுக்கு' முதல் - இரண்டரை மாதங்கள் முன்னதாக - தமிழகத்தின் பிரபலமான வார ஏடான 'ஆனந்த விகடன்' இதே விடயத்தை ஒட்டி கருத்துக் கணிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில், புலிகள் இயக்கம் மீதான தடையை இந்திய அரசு நீக்கவேண்டும் என 47.6 வீதத்தினர் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

அது இப்போது 51 வீதமாக உயர்ந்திருக்கிறது. புலிகள் ஆதரவு அலை அங்கு பிரவாகம் எடுக்கத் தொடங்கிவிட்டது என்பதையே இப்போதைய கருத்துக் கணிப்பு உறுதிப்படுத்தியிருக்கிறது.

அது மட்டுமல்ல. 'விடுதலைப் புலிகள் இயக்கம்' என்றால் 'என்ன?, அதுபற்றிய உங்கள் கருத்து எத்தகையது? - என்ற கேள்விகளுக்குத் தமிழக மக்கள் தந்திருக்கும் பதில்தான் இன்னும் ஆச்சரியமானது.

இந்திய அரசோ, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக அறிவித்து அந்தப் பட்டியலில் சேர்த்திருக்கின்றது.

ஆனால், தமிழக மக்களில் ஆகப் பன்னிரு சதவீதத்தினரே புலிகளைப் பயங்கரவாதிகளாகக் காண்கின்றார்கள்.

எஞ்சியவர்களுள் -

முப்பது வீதத்தினர் புலிகளை 'விடுதலைப் போராளிகள்' என்றும் -

இருபத்திரெண்டு வீதத்தினர் புலிகளை 'தமிழர்களின் இலட்சியத்துக்காக ஏனையோரோடு சேர்ந்து போராடுபவர்கள்' என்றும் -

முப்பத்தியாறு வீதத்தினர் புலிகளை 'இலங்கைத் தமிழர்களின் ஏக, நேர்மையான பிரதிநிதிகள்' என்றும் -

தெளிவாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இதன்படி, தமிழகத்தில் புலிகளைப் 'பயங்கரவாதிகள்' என்பவர்கள் ஆக 12 வீதத்தினரே. புலிகள் மீதான தடை நீடிக்கப்படுவதை விரும்புபவர்கள் அல்லது ஆதரிப்பவர்கள் ஆக 23 வீதத்தினரே.

எனவே, தமிழக மக்களின் விருப்புக்கு மாறாகவே புலிகள் மீதான தடை இந்தியாவில் - மத்திய அரசினால் - நீடிக்கப்படுகின்றது என்பதே 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கருத்துக் கணிப்பு வெளிப்படுத்தும் பிரதான அம்சமாகும்.

## இடைநடுவில் நின்றது இ.போ.ச.பஸ் இருளில் திண்டாடினர் பயணிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.14

யாழ். நகரில் இருந்து மாலை 5.30 மணிக்கு மானிப்பாய் வீதியூடாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காரைநகர் நோக்கிப் பயணிகளுடன் புறப்பட்ட 782 இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் திடீரென மானிப்பாய்- கட்டுடைப் பகுதியில் பழுதடைந்து நின்றது.

இந்நிலையில், உடனடியாக மாற்று நடவடிக்கைகள் எடுத்துப் பயணிகளை வீடுகளுக்கு அனுப்பி வைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாமையால் இருள் நேரத்தில் செய்வது அறியாது திண்டாடினர்.

இந்த விடயம் தொடர்பாக குறிப்பிட்ட பஸ்ஸில் பிரயாணம் மேற்கொண்ட பயணி ஒருவர் தெரிவித்த கருத்து எம்மை ஒரு கணம் சிந்திக்க வைக்கின்றது.

மாலை 5.30 மணிக்கு யாழ். நகரில் இருந்து புறப்பட்ட மேற்படி பஸ் மானிப்பாய் - கட்டுடைப் பகுதியில் 6 மணியளவில் பழுதடைந்து நின்று விட்டது.

இத்தகவல் உடனடியாகக் காரைநகர் டிப்போவுக்குத் தெரிவிக்கப்பட்ட போதும் 7 மணிக்குப் பின்னரே பொறியியல் பிரிவினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர்.

பொறியியல் பிரிவினர் மற்றுமொரு பஸ்ஸில் வருகை தந்திருந்த போதும் குறித்த பஸ்ஸில் பிரயாணம் செய்த பயணிகளை உடனடியாகத் தொடர்ந்து பயணம் மேற்கொள்ள அனுமதிக்கவில்லை.

பழுதடைந்த பஸ்ஸைத் திருத்தும் பணிகளிலேயே அவர்கள் ஈடுபட்டிருந்தனர். பழுதடைந்த பஸ்ஸைத் திருத்த முடியாது போகவே இரவு 8 மணிக்குப் பின்னர் பொறியியல் பிரிவினர் வருகை தந்திருந்த பஸ் ஸில் பயணிகள் அழைத்துச் செல்லப் பட்டனர். இதனால், பயணிகள் பெரும் அவஸ்தைகளை எதிர் கொண்டனர். பயணிகள் இரவு எட்டு மணியாகியும் விடுபோய்ச் சேராததால் அவரவர் குடும்பத்தினரும் உறவினரும் ஏங்கித் தவித்தனர்.

## பருவமழை பெய்ய ஆரம்பித்ததையடுத்து பெரும்போகச் செய்கையில் மும்முரம்

யாழ்ப்பாணம்,ஒக்.14

தற்போது பெய்ய ஆரம்பித்துள்ள மழையை அடுத்து வலி.கிழக்கு மற்றும் வலி.மேற்கு பிரதேச விவசாயிகள் பெரும் போக நெற்செய்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயிகள் தமது வயல்களுக்கு விதை நெல்களையும், பசளைகளையும் எடுத்துச் சென்று விதைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடும் வரட்சி, வெப்பம் போன்றவற்றை அடுத்து கடந்த சில நாள்களாக பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

பருவ மழைக்காலம் பிந்தியுள்ளதால் பெரும்போக நெற்செய்கையும் காலம் பிந்தியே ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-224)

## நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய மலர் வெளியீடும் பரிசில் தினமும்

யாழ்ப்பாணம்,ஒக்.14

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வாணி விழாவும், மலர் வெளியீடும், பரிசில் தினமும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு அதிபர் க.சத்தியவரதன் தலைமையில் வித்தியாலய சிறப்புக் கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தீவகக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.இராதாகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினர்களாக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாஸ், தீவகக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் அ.தேவஅருள்ராஜா ஆகியோரும் கலந்துகொள்வர்.

'தீபம்' மலரை கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.இராதகிருஷ்ணன் வெளியிட்டு வைக்க வண.போதகர் ஆர். யோண்செல்வம் முதற்பிரதியை பெற்றுக்கொள்வார். கலைநிகழ்வுகளும் இடம்பெறவுளளன. (203-86)

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கச்சாய் நூலகத்தால் கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.14

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கச்சாய் பொது நூலகத்தால் வாசகரிடையே கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கச்சாய் பொது நூலகத்தில் போட்டி இடம்பெறவுள்ளன.

கேடில் விழுச் செல்வம் புத்தகம் ஒரு சமுதாயம், வாசிப்புத் திறன் விருத்தியில் பொது நூலகங்கள், தகவல் புரட்சி தோற்றுவிக்கும் விளைவுகள், இன்றைய உலகில் நூல்கள் ஆகிய தலைப்புகளில் போட்டி நடத்தப்படவுள்ளன. நடுவர்களால் தெரிவுசெய்யப்பட்டு வழங்கப்படும் தலைப்புக்களில் ஒன்றரை மணித்தியாலத்திற்குள் 300 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதப்பட வேண்டும்.

போட்டியில் பங்குகொள்ள விரும்புவோரை வயதுக் கட்டுப் பாடின்றி எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் நூலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நூலகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (203)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.14

யாழ்.பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் மக்கள் வங்கி பல்கலைக்கழக கிளையின் ஆதரவுடன் அமரர் ஏ.எவ்.செபமாலைமுத்து ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்படும் மென்பந்து சுற்றுப்போட்டியில் இன்று யாழ்.பல் கலைக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* காலை 8.30 மணி - கரவெட்டி தபாலகம் எதிர் எச்.என். பி.அசூரன்ஸ்.
* முற்பகல் 11 மணி - எச்.என்.பி யாழ்ப்பாணம் எதிர் இலங்கை வங்கி.
* பிற்பகல் 1 மணி - சிலிங்கோலைஃவ் எதிர் யாழ்.ப.நோ.கூ.ச.
* பிற்பகல் 3 மணி - வேர்ள்ட் விஷன் எதிர் யாழ்.செயலகம். (1)

* * *

வலி வடக்கு, ஒக்.14

தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 13, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானம் -

**13 வயதுப் பிரிவு**

* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் (அரையிறுதி ஆட்டம்) -

**16 வயதுப் பிரிவு**

* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.
* அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானம் -

**16 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்
* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் மல்லாகம் குளமல்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை.

**18 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம். (1-86)

* * *

வலி வடக்கு, ஒக்.14

நல்லூர்க் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம் பெற்றுவரும் 14, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் 14 வயதுப் பிரிவினருக்கான 3ஆம் இடத்திற்கான ஆட்டமும் இறுதி ஆட்டமும் 16 வயதுப் பிரிவினருக்கான 3ஆம் இடத்திற்கான போட்டியும் 18 வயதுப் பிரிவினருக் கான அரையிறுதி ஆட்டங்களும் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 1.30 மணிக்கு 16 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டமும் 18 வயதுப் பிரிவினருக்கான 3ஆம் இடத்திற்கான ஆட்டம் மற்றும் இறுதி ஆட்டமும் இடம்பெறவுள்ளன.

(203-86)

## யாழ்.ப.நோ.கூ.சங்கத்தால் பங்கீட்டுக்கு கோதுமை மா

யாழ்ப்பாணம்,ஒக்.14

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பங்கீட்டு அட்டைக்குகோதுமைமாவை நுகர்வோருக்கு விநியோகிக்கவுள்ளதாக [illegible] தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு மூன்று கிலோ வீதம் கிலோ 80 ரூபா விலையில் விநியோகிக்கப்படவுள்ளது.

இன்று விடுமுறைதினமாக இருப்பினும் பாவனையாளரின் வசதிகருதி சங்கக் கிளைகள் யாவும் முழு நாளும் திறந்து கோதுமை மா விநியோக நடவடிக்கையில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (203-224)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 29 | 15.10.2008 |
| | புதன்கிழமை |
| திதி: | பிரதமை |
| | பி.இ.12.28வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி |
| | பி.இ.05.30 வரை |
| சுபநேரம் : | 04.32 -06.02 |
| ராகுகாலம் | 12.02-01.32 |

## உங்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்...

**உறுப்புரை - 18**

சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை - 19**

கருத்துச் சுதந்திரத்திற்கும் பேச்சுச்சுதந்திரத்திற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

**உறுப்புரை - 20**

எவருக்கும் சமாதானமான முறையில் ஒன்று கூடுவதற்கும், இணைவதற்குமான சுதந்திரத்திற்கு உரிமையுண்டு.

**உறுப்புரை - 21**

ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டின் ஆட்சியில், நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையிலோ தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்கு பெறுவதற்கு உரிமையுண்டு.

**உறுப்புரை - 22**

சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவரும் சமூகப் பாதுகாப்புக்கு உரிமையுடையவராவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் 'இதயத்தால் சிந்திப்போம்' சமாதான விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள். யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் தலைவர் வைத்திய கலாநிதி ஜி.பவானி மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். யாழ்.மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா, யாழ்.பல்கலைக்கழக முகாமைக்கற்கைகள் வணிக பீடாதிபதி க.தேவராசா ஆகியோர் உரையாற்றுவதை இரண்டாவது மூன்றாவது படங்களில் காணலாம். விழாவில் நடைபெற்ற கலை நிகழ்வுகளை நான்காவது படத்திலும் நிகழ்வில் கலந்த கொண்டவர்களில் ஒரு பகுதியினரை ஐந்தாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்:லக்ஸ்மன்)*


## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும், நவாலியைச் சேர்ந்த எமது சக ஊழியரான ம.நிர்மலேஸ்வரன் தம்பதிகளின்

**செல்வப் புதல்வன்**

**நி.டிலெக்ஸ்சேஸ்வரன்**

2008 புலமைப் பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளை (மாவட்டநிலை 20) பெற்று சித்தியெய்தியதையிட்டு அவரை மனமார வாழ்த்துவதோடு அவர் சகல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன சக.ஊழியர்கள்
K.K.S

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அண்மையில் சோமசுந்தரம் வீதியில் 2 1/2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு :-
021 222 4019

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக் கப்பயில. By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சுங்கானை

"THE ROYAL IS THE BEST"

## விற்பனைக்குண்டு

கோண்டாவில் கிழக்கு பலாலி - இருபாலை வீதிச் சந்தியிலிருந்து 200 அடி தூரத்தில், இருபாலை வீதியில் 6½ பரப்பு வீடு கட்டக்கூடிய நல்ல தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 6320676
021 4590844

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கணேசமூர்த்தி -லதா தம்பதியரின் செல்வப் புதல்வி

**செல்வி க.வபித்திரா**

2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதோடு மேலும் கல்வியில் சிறந்து விளங்கி பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம். இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு வழிசமைத்த யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: *அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியம்மார் குடும்பம், சித்திகுடும்பம், மாமாகுடும்பம், லண்டனில் வசிக்கும் பெரியம்மா குடும்பம்,பிரான்சில் வசிக்கும் மாமா.*

குரும்பைகட்டி,
புலோலி. (79227)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் முன்னாள் பணிப்பாளரும், கரவெட்டிப் பிராந்திய சபையின் தலைவரும், கரணவாய் கலட்டிப் பிள்ளையார் சி.க.கூ.சங்கத்தின் பொருளாளருமாகிய

**கணபதிப்பிள்ளை முத்துவேலு**

அவர்கள் 2008.10.12 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் மீளாத்துயிலினால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

*(C/555420)*

தலைவர், பணிப்பாளர்கள்
மாவட்டச்செயலாளர், பணியாளர்கள்,
யாழ்.மா.சி.க.கூ.சங்.சமாசம்.

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள MARUTHY ALTO சாம்பல் நிற கார் விற்பனைக்குண்டு.

NPKA - XXXX
Contact - 0773618129,
060 2216968

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.ச.சிறிகுமார் அவர்களின் தாயார்

**திருமதி சண்முகம் மகேஸ்வரி**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **சின்னராசா மனோன்மணி**

தோற்றம் 25.07.1937 — மறைவு 07.10.2006

பாசமதால் கட்டியாண்டு பண்புடனே வளர்த்தெடுத்து
பாரகத்தே நாம் சிறக்க பல நலன்களை காட்டிவிட்டு
நேசமுடன் கோயிலதாய் எம் நெஞ்சில் கொண்டவளே!
மாசுபடா உங்கள் நினைவுகளுடன் எங்கள் மனதில்
நிலைத்து நிற்பீர்கள்

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (79222)

என்றும் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

*செல்லத்துரை செல்வரத்தினம்*



செல்லத்துரை செல்வரத்தினம் நேற்று (13.10.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை- தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் யசோதரா, சந்திரிகா, யசோதரன், தீபா, மயூரன் (டோகா), தங்கா ஆகியோரின் அன்புத் தந்தையும், தவரஞ்சினி, புஸ்பராணி, தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் மேகநாதன், கதிரவேலு, கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், V.A.M மனோகரனின்(நெல்லியடி) மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (15.10.2008) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி மேற்கு.*

தகவல்:
குடும்பத்தினர்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள் - 2007
## கலைமுதற் தேர்வு 2006

### பரீட்சை மண்டபங்கள் தொடர்பான அறிவித்தல்

மேற்படி பரீட்சையில் தமிழ், இந்துநாகரிகம் மற்றும் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் (E.S.L) ஆகிய பாட அலகுகளுக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் கீழ் குறிப்பிடப்படும் மண்டபங்களில் பின்வரும் சுட்டிலக்க ஒழுங்கில் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

| திகதி | நேரம் | பாட அலகு | பரீட்சை மண்டபம் | சுட்டிலக்கம் |
|---|---|---|---|---|
| 18.10.2008 (சனிக்கிழமை) | 8.45 - 11.45<br>12.30 - 3.30 | EX.T.1.1<br>EX.T.1.2<br>(தமிழ்) | வெளிவாரிப் பரீட்சைகள் அலகில் அமைந்துள்ள பரீட்சை மண்டபம் | 10020066 தொடக்கம் 10020719 வரை<br>10120022 தொடக்கம் 10120688 வரை<br>10220006 தொடக்கம் 10221012 வரை<br>10320064 தொடக்கம் 10321158 வரை<br>10420005 தொடக்கம் 10420801 வரை |
| | | | கலைத்துறை, மண்டபம், 3ஆம் மாடி, யாழ். பல்கலைக்கழகம் | 10520007 தொடக்கம் 10521093 வரை<br>94195 தொடக்கம் 99862 வரை |
| | | | ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை - கோப்பாய் | 10620005 தொடக்கம் 10621043 வரை |
| 25.10.2008 (சனிக்கிழமை) | 8.45 - 11.45<br>12.30 - 3.30 | EX.HC.1.1<br>EX.HC.1.2<br>(இந்து நாகரிகம்) | வெளிவாரிப் பரீட்சைகள் அலகில் அமைந்துள்ள பரீட்சை மண்டபம் | 10020052 தொடக்கம் 10020719 வரை<br>10120022 தொடக்கம் 10120688 வரை<br>10220009 தொடக்கம் 10221012 வரை<br>10320046 தொடக்கம் 10321153 வரை |
| | | | கலைத்துறை, மண்டபம், 3ஆம் மாடி, யாழ். பல்கலைக்கழகம் | 10520007 தொடக்கம் 10521093 வரை<br>94195 தொடக்கம் 99862 வரை |
| | | | ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை - கோப்பாய் | 10420005 தொடக்கம் 10420823 வரை<br>10620005 தொடக்கம் 10621048 வரை |
| 01.11.2008 (சனிக்கிழமை) | 8.45 - 11.45 | EX.ESL.1.0<br>(இரண்டாம் மொழியாக ஆங்கிலம்) | வெளிவாரிப் பரீட்சைகள் அலகில் அமைந்துள்ள பரீட்சை மண்டபம் | 10020052 தொடக்கம் 10020719 வரை<br>10120022 தொடக்கம் 10120699 வரை<br>10220006 தொடக்கம் 10221024 வரை |
| | | | கலைத்துறை, மண்டபம், 3ஆம் மாடி, யாழ். பல்கலைக்கழகம் | 10320046 தொடக்கம் 10321140 வரை<br>10420005 தொடக்கம் 10420829 வரை |
| | | | முகாமைத்துவத்துறை மண்டபம் - III யாழ்.பல்கலைக்கழகம் | 10520007 தொடக்கம் 10521073 வரை<br>91432 தொட்க்கம் 99868 வரை |
| | | | ஆசிரியர் பயிற்சிக் கலா சாலை - கோப்பாய் | 10620005 தொடக்கம் 10621048 வரை |

முக்கிய குறிப்பு: ஏனைய பாடங்களுக்கான பரீட்சைகள் யாவும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அமைந்துள்ள பரீட்சை மண்டபங்களில் மட்டும் நடைபெறும். மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதில் பதிவாளர்.
13.10.2008

(சி/555419)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசும், புலிகளும் பேச்சில் ஈடுபட இந்தியா உரிய அழுத்தம் கொடுக்கவேண்டும்

## டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்



காரைக்குடி, ஒக்.14

"இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் யுத்தத்தைக் கைவிட்டு உடனடியாகச் சமரசப் பேச்சில் ஈடுபட இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும்" - என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஈழத் தமிழர்களைக் காக்கும் பிரச்சினையில் இப்போது தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையை வலுப்படுத்துகின்ற வகையில் ஒருமித்த கருத்துடைய அனைத்து அரசியல் இயக்கங்களையும் ஓரணியில் திரட்டி, இலங்கை மண்ணில் தமிழினத்தை ஒழித்துக்கட்டியே தீருவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு மூர்க்கத்தனமாகப் போரிட்டு வரும் சிங்கள இனவெறி அரசுக்கு பாடம் புகட்டுவதற்கான நடவடிக்கைகளை வகுத்துச் செயற்பட வேண்டும் - என்றும் கூறினார்.

காரைக்குடியில் நேற்றுமுன்தினம் நடந்த மது ஒழிப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக காரைக்குடி வந்த அவர், செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஈழத் தமிழர் பிரச்சினையில் அரசியலுக்கு அப்பாற்பட்டு அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் செயல்படவேண்டும்.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் சமரசப் பேச்சியில் ஈடுபடவேண்டும். அதற்கு மத்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் சிங்களப் படையினரின் அட்டூழியங்களையும், அத்துமீறல்களையும் நேரில் அறிந்துவர இங்கிருந்து நாடாளுமன்றக் குழுவை அனுப்பவேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் அவர்களின் சொந்த மண்ணிலேயே அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள முகாம்களுக்குச் சென்று அவர்களை நேரில் சந்தித்து நிலைமைகளை அறிந்துவரச் செய்யவேண்டும். அவர்கள் கொடுக்கின்ற அறிக்கையின் அடிப்படையில் இந்திய அரசு உடனடியாக மனிதாபிமான உதவிகளைச் செய்ய வற்புறுத்த வேண்டும்.

இலங்கையில் நடந்து வரும் தமிழின அழிப்புப் போர் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்திட இங்குள்ள தமிழர்கள் எல்லாம் ஒன்றுபடுவோம். ஓரணியில் திரள்வோம்.

இளைஞர்களிடம் குடிப்பழக்கம் தற்போது 13 வயதிலேயே ஆரம்பித்து விடுகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் குடிப்பழக்கம் அதிகம். அதனால்தான் விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. இளம் விதவைகளும் உருவாகின்றனர். நாட்டை முன்னேற்ற வேண்டுமானால் நல்வாழ்வுத் திட்டங்கள், வேலை வாய்ப்புகளை உருவாக்கினால் மட்டும் போதாது, சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கும் மதுவை ஒழிக்க வேண்டும். உடனடியாக முடியாவிட்டாலும் படிப்படியாக மதுக்கடைகளின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும். - என்றார்.

# சர்வ கட்சிக் கூட்டத்தை விஜயகாந்தும் புறக்கணிப்பு



ஈழத் தமிழர் பிரச்சினைக்காக தமிழக முதல்வர் கருணாநிதி கூட்டியுள்ள அனைத்து கட்சிக் கூட்டத்தில் தே.மு.தி.க. பங்கேற்காது - என்று விஜயகாந்த் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு-

ஈழத் தமிழர் பிரச்சினைக்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் எங்களைப் போன்றவர்கள் கலந்து கொண்ட போது, "ஈழத் தமிழர்களுக்கு எதிரானவர்களும், அரைகுறை ஆதரவாளர்களும் கலந்து கொண்டார்கள்" என்று கருணாநிதி குறிப்பிட்டமை ஒரு சுமுக சூழ்நிலையை உருவாக்கக் கூடியதா?

1956 முதல் இலங்கைத் தமிழர்களுக்காக உண்மையாகப் பாடுபடுவது தி.மு.கதான் என்று கருணாநிதி கூறிய பிறகு மற்றக் கட்சிகளுக்கு இதில் என்ன வேலை என்று கேட்பதாகத்தானே அர்த்தம். உண்ணாவிரதத்துக்குப் போட்டியாக தந்தி அனுப்புங்கள் என்று அறிவித்தபோது அனைத்துக் கட்சிகளைப் பற்றிய சிந்தனை இல்லாதமை ஏன்?

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் காரணம் காட்டி சொந்தப் பாதுகாப்பை பலப்படுத்திக் கொள்ளும் ஜெயலலிதாவின் போக்கையும், அதேபோல இலங்கை அரசுக்கு மத்திய அரசு ரகசியமாக உதவி செய்வதையும், அதற்குத் துணைபோகும் தி.மு.கவையும் தே.மு.தி.க. கண்டிக்கிறது என்றுள்ளது.

# ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து பொங்கியெழுகிறது தமிழ்த் திரையுலகம்!

## 19ஆம் திகதி இராமேஸ்வரத்தில் போராட்டம், 3 நாட்கள் படப்பிடிப்பும் ரத்து

சென்னை, ஒக்.14

ஈழத் தமிழர்களை இலங்கை இராணுவம் கண்மூடித்தனமாகப் படுகொலை செய்வதைக் கண்டித்தும் அவர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்தக் கோரியும் தமிழ்த் திரையுலகினர், இராமேஸ்வரத்தில் 19ஆம் திகதி பேரணி - பொதுக் கூட்டம் நடத்துகின்றனர். இதையொட்டி படப்பிடிப்புகளும் 3 நாள்கள் ரத்து செய்யப்படுகின்றன.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் போராட்டம் நடத்துவது குறித்து தமிழ்த் திரையுலகினர் நேற்றுமுன்தினம் கூடி ஆலோசித்தனர். தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், திரையரங்கு உரிமையாளர்கள், இயக்குநர்கள், நடிகர், நடிகைகள் மற்றும் பெப்சி உள்ளிட்ட அனைத்து சங்கப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்குப் பின், தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் ராம.நாராயணன், இயக்குநர் பாரதிராஜா ஆகியோர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு-

இலங்கை அரசு நடத்தும் தமிழினப் படுகொலையைக் கண்டித்தும், தமிழர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும், தமிழ்த் திரையுலகின் சார்பில் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இம்மாதம் 18, 19, 20 ஆகிய திகதிகளில் படப்பிடிப்பு உட்பட அனைத்துப் பணிகளும் ரத்துச் செய்யப்படுகின்றன. திரையுலகினர் இராமேஸ்வரத்தில் 19ஆம் திகதி ஒன்று திரண்டு பேரணி, பொதுக் கூட்டம் நடத்தி, இலங்கை அரசுக்கு தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு முடிவு வரும் வரை திரையுலகினர் கறுப்புப் பட்டி அணிவது தொடரும். இலங்கையில் தமிழர் பகுதியில் குண்டு வீசுவதை நிறுத்த வேண்டும். போர் நிறுத்தம் அறிவித்து, அமைதி திரும்ப உதவ வேண்டும். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இந்திய அரசு உணவு, உடை, மருத்துவ உதவிகளை நேரடியாக வழங்க வேண்டும்.

இலங்கை அரசுக்கு இராணுவ உதவிகளை இந்தியா உடனே நிறுத்த வேண்டும். தமிழக மீனவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை நிறுத்த வேண்டும். இந்திய, இலங்கை கூட்டு ரோந்து திட்டத்தை கைவிட வேண்டும். இலங்கைக்கு தூதுக்குழுவை அனுப்பி, அங்கு நடப்பதைப் பார்த்து, மத்திய அரசுக்கும் தமிழக மக்களுக்கும் அறிக்கை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்துகிறோம் - என்றனர்.

# கருணாநிதியின் தீவிரவாத ஆதரவுப் போக்கால் புலிகள் உள்ளிட்ட பயங்கரவாதிகள் தமிழகத்தில்!

## சாடுகிறார் ஜெயலலிதா

கருணாநிதியின் தீவிரவாத ஆதரவுப் போக்குக் காரணமாக புலிகள் உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர் - என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

"பொலிஸாரைக் கண்டு வன்முறையாளர்கள் அஞ்சிய காலம் போய், வன்முறையாளர்களைக் கண்டு பொலிஸார் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கின்றனர். காவல்துறை முதல்வர் கருணாநிதியின் ஏவல் துறையாகிவிட்டது. தங்களது உயிரையும், உடைமையையும் தாங்களே பாதுகாத்துக் கொள்கின்ற கட்டாயத்துக்கு தமிழக மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

1991-1996 அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருந்தன. விடுதலைப் புலிகள், நக்சலைட்டுகள் உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் தமிழகத்தைவிட்டு விரட்டியடிக்கப்பட்டனர்.

2006இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் புலிகள் உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர் - என்றார்

# தீயில் எரியும் ஈழத் தமிழரின் அழுகுரல்கள் இந்திய அரசின் செவிகளில் விழவில்லையா?

## திருமாவளவன்



சென்னை, ஒக்.14

குண்டுமழை நடுவினிலும் குருதி மழை நடுவினிலும் நின்று உயிர் காக்கக் கோரும் ஈழத் தமிழரின் அவலக் குரல் இந்தியப் பேரரசின் செவிகளுக்கு எட்டவில்லை எனும் நிலை வேதனையளிக்கிறது - என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கையில் ஈழத் தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் அரக்கத்தனமாக - விலங்குகளை விடக் கொடூரமாக - படுகொலை செய்யப்படுவதை இந்திய அரசு தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழர்கள் உள்ளிட்ட உலகத் தமிழினமே உரத்து குரலெழுப்பி வருகிறது. எனினும் தமிழினத்தின் அவலக் குரல் இந்தியப் பேரரசின் செவிகளுக்கு எட்டவில்லை எனும் நிலை வேதனையளிக்கிறது.

இந்திய அரசின் போக்கைத் தடுக்கவும், அதேவேளையில் தமிழ் இனத்திற்கு பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தவும் தமிழக ஆளுங்கட்சியான தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுமே குரலெழுப்பி வருவது ஆறுதல் அளிக்கிறது.

அத்துடன், இது தொடர்பாக ஒட்டுமொத்த தமிழர்களும் ஒருமித்த முடிவை மேற்கொள்ளும் வகையில் முதல்வர் கருணாநிதி 14ஆம் திகதி (இன்று) அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டுவதென அறிவித்திருக்கின்றமை போற்றுதலுக்குரியதாகும்.

வாழ்வா-சாவா என்னும் நெருக்கடியில் சிக்கியுள்ள ஈழத்தமிழினத்தைப் பாதுகாக்கும் உணர்வோடு த.வெள்ளையன் தலைமையிலான வணிகர் சங்கக் கூட்டமைப்பு எதிர்வரும் 17ஆம் திகதி தமிழகம் தழுவிய அளவில் கடையடைப்பு அறப்போர் நடத்த அழைப்பு விடுத்திருப்பது மிகுந்த பாராட்டுக்குரியதாகும். வணிக பெருமக்களின் தமிழ் மான உணர்வை விடுதலைச்சிறுத்தைகள் மனதார வரவேற்றுப் பாராட்டுகிறது.

அத்துடன், ராஜபக்ஷவின் உருவப் பொம்மைகளை எரிக்கும் அறப்போரிலும் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் ஈடுபட்டு தனது எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளிப்படுத்த முன்வரவேண்டும் எனவும் விடுதலைச் சிறுத்தைகள் [illegible] - என்று அதில் [illegible]

# தமிழகத்தை நம்பிவரும் ஈழ அகதிகளுக்கு வெறும் ஏமாற்றமே பரிசாகக் கிடைக்கிறது

இந்தியாவிலுள்ள ஈழத் தமிழ் அகதிகள் படும் அவலங்கள் குறித்து வரையப்பட்ட கட்டுரை ஒன்று தமிழக நாளேடான தினமணியில் நேற்று வெளியானது. அதனை அப்படியே இங்கு தருகிறோம்.

சொந்த நாட்டில் ஏற்படும் போரினாலும், பிரச்சினைகளாலும் மற்றொரு நாட்டுக்கு இடம்பெயரும் அகதிகள், இடம்பெயர்ந்த நாட்டிலும் அடைக்கலம் கிடைக்காவிட்டால் அவர்களது வாழ்க்கை கேள்விக்குறிதான்.

அப்படியொரு நிலைதான் இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு ஏற்பட்டுள்ளது. உள்நாட்டுப் போரில் உறவையும், உறைவிடத்தையும் விட்டுவிட்டு உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு, இந்தியாவுக்கு வந்தவர்களுக்கு அரசின் அதீத கட்டுப்பாட்டால் வாழ்க்கையே நரகமாக மாறியுள்ளது.

இலங்கையில் 1983ஆம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டுப் போரின் விளைவாக, இலங்கைத் தமிழர்கள் புலம்பெயரத் தொடங்கினர். மூன்றில் ஒருபங்கு தமிழர்கள், வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர். பெரும்பாலானவர்கள் இந்தியாவுக்கு வந்தனர்.

அவ்வாறு அகதிகளாக இந்தியாவுக்கு வந்து சேர்ந்த ஈழத் தமிழர்களைத் தங்கவைக்க தமிழகத்தில் 117 முகாம்கள் அமைக்கப்பட்டன. இந்த முகாம்களில் தற்போது ஒரு லட்சம் பேர் உள்ளனர்.

சொந்த நாட்டில் உயிருக்கும், உடைமைக்கும் உத்தரவாதம் இல்லாமல் வந்த அகதிகளுக்கு, இங்கும் எந்த உத்தரவாதமும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தங்களது இனம், மொழி, கலாசாரம் என பல ஒற்றுமைகளுடன் இருக்கும் தமிழகத்தை நம்பி வந்த ஈழத் தமிழர்களுக்கு பெரும்பாலான இடங்களில் ஏமாற்றமே பரிசாகக் கிடைத்திருக்கிறது.

உயர் கல்வி படிக்க 2000ஆம் வரை தமிழகத்தில் அகதிகளுக்கு மேல் ஒதுக்கீடு 5 சதம் இருந்தது. ஆனால், நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பின் விளைவாக, அந்த ஒதுக்கீடு பறிபோனது. கல்வி மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலுமே இந்தியாவில் உள்ள பிறநாட்டு அகதிகளைவிட, இலங்கை அகதிகளுக்கு அதிக கட்டுப்பாடுகள் உள்ளன என காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், அவர்களுக்கு உதவியாக இருந்தவர்களும் அண்மைக்காலமாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இதன் காரணமாக காவல் துறை, முகாம்கள் மீதான கட்டுப்பாட்டையும், கண்காணிப்பையும் தேவைக்கு அதிகமாகவே அதிகப்படுத்தியுள்ளது. இதனால், அகதிகள் ஓரிடத்தில் நிலையாக வேலை செய்து, அன்றாட வாழ்க்கையைக் கழிக்கவே கஷ்டப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதீத கட்டுப்பாட்டின் ஒரு பகுதியாக அகதிகள் வைத்திருக்கும் வாகனங்களின் ஆவண நகல்களை வழங்க வேண்டும்; வேலை செய்யும் இடத்தின் முகவரியைத் தெரிவிக்க வேண்டும்; கையடக்கத் தொலைபேசிக் கண்காணிப்பு, வெளியூருக்கு வேலைக்குச் செல்லக் கூடாது என பல கட்டுப்பாடுகளை காவல்துறையினர் இலங்கை அகதிகள் மீது திணித்துள்ளனர். இலங்கையில் அந்த நாட்டு இராணுவம் செய்த வேலையை, இந்தியாவில் காவல் துறையினர் செய்கின்றனர். சோதனைகள் குறையவும் இல்லை, மாறவும் இல்லை. ஆள்களும், இடமும்தான் மாறி இருக்கின்றன.

இலங்கை அகதிகள் காவல் துறையினரால் மிகவும் கண்காணிக்கப்படுவதால், அவர்களுக்கு வேலை வழங்க தொழில் நிறுவனங்கள் தயக்கம் காட்டுகின்றன. மேலும் சில நிறுவனங்கள் வெளிப்படையாகவே இலங்கை அகதிகளுக்கு வேலை கொடுப்பதில்லை என அறிவிக்கின்றன.


இந்தியாவில் குடியேறி உள்ளதுபோல கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு அகதிகளாகச் சென்ற இலங்கை மக்களுக்கு, இவ்வளவு விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் இருக்கின்றன எனத் தெரியவில்லை.

மேலும், இங்குள்ள அகதிகளைவிட, அங்குள்ள அகதிகள் பொருளாதாரம், கல்வி என அனைத்துத் துறைகளிலும் நன்றாகவே உள்ளனர். மேலும், அங்கு அவர்களுக்கு சமுதாயத்தில் அந்தஸ்தும் கொடுக்கப்படுகிறது.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்காக போட்டிபோட்டு குரல் கொடுக்கும் தமிழக அரசியல்வாதிகள், உள்ளூரிலேயே அடிப்படைத் தேவைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு, அடைக்கலம் தேடி வந்த இடத்தில் அடைக்கலம் கிடைக்காமல் வதைக்கப்படும் ஈழத் தமிழர்களுக்காக ஏன் குரல் எழுப்பவில்லை என்பதே மக்களின் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு கனடாவில் தமிழர்கள் எதிர்ப்பு




ஸ்காபரோ,ஒக்.14

கனடாவில் கடந்த சனிக்கிழமை தொடங்கியுள்ள கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணியினருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு போராட்டம் நடைபெற்றுள்ளது. இந்தப் போராட்டத்தில் கனடா வாழ் தமிழர்கள் நூற்றுக் கணக்கில் பங்குபற்றினர்.

கடந்த சனிக்கிழமை ஆரம்பித்த கிரிக்கெட் போட்டிகள் நேற்று திங்கட்கிழமையும் நடைபெற்றன.

தமிழ் மக்களை குண்டுவீசியும் பட்டினிச் சாவில் மூழ்கடித்தும் கொன்றொழித்துக்கொண்டு ஈழத்தமிழ் மக்களின் அவலங்களை மூடிமறைத்து, விளையாட்டுக்களிலும் களியாட்டங்களிலும் சிறந்த தேசம் எனதன் தேசத்தை காட்டுவதற்காக தன் கோர முகத்தை திரையிட்டு மறைக்க முயற்சிக்கும் சிறிலங்கா அரசின் முகத் திரையை கிழிக்குமுகமாக இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்ட போராட்டம் நடத்தப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் அறி வித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து கனடா வாழ் தமிழ்த் தேசிய உறவுகளையும் பங்கேற்குமாறு கனடா தமிழ் மகளிர் அமைப்பினரும், தமிழ் இளையோர் அமைப்பினரும் கேட்டுக்கொண்டிருந்தனர். (அ-சி)

# கந்தளாயில் நேரடி மோதல்

திருகோணமலை,ஒக்.14

திருமலை, கந்தளாய் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் நேரடி மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அந்த மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் அதன்போது விடுதலைப் புலிகளால் விட்டுச் செல்லப்பட்ட தொலைத்தொடர்பு கருவி ஒன்று மீட்கப்பட்டது என்றும் படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இச்சமர் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. (சி)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலவும்

மலர்வு 24 . 12 . 1981



உதிர்வு 31 . 08 . 2008

## கனகரத்தினம் நர்மதன்

(தனியார் பஸ் சாரதி)

கடந்த 31.08.2008இல் அகால மரணமான எமது அன்புச் செல்வம் கனகரத்தினம் நர்மதன் (மதன்) அவர் களின் மரணச்செய்தி கேட்டு ஓடோடிவந்து பலவிதமாக உதவிய நண்பர்கள், உறவினர்கள், பொதுநிறுவனத்தினர், அயலவர்கள் அனைவருக்கும், வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தியை தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (14.10.2008) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்பு உள்ளங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.*

தேவபாலன் குடும்பம் *(ஜேர்மனி)*, ஜெயகுமார் குடும்பம் *(சவுதி)*. (79211)

**அப்பா, அம்மா, மனைவி, பிள்ளை, சகோதரர்கள்.**

## தென்மராட்சி முன்பள்ளிகளுக்கு சவர்க்கார வகைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.14

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளுக்கு ஒக்ரோபர், நவம்பர் மாதங்களுக்குரிய சவர்க்கார வகைகள் வழங்கப்பட்டன.

'போரூட்' நிறுவனத்தினரால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வழங்கப்பட்ட சவர்க்கார வகைகள் அந்தந்தப் பிரிவு பொதுச் சுகாதார பரிசோதகர்களால் முன்பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-207)


## MALAYSIA

## எனது இரண்டாவது இல்லம்

அமைதியானதோர் சூழலில் குடியமர்வதற்கான அரிய சந்தர்ப்பம்
உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்குமான இச்சிறப்புரிமையை மலேசியா வழங்குகின்றது.

- புதுப்பிக்கப்படக்கூடிய 10 வருட விசா (சமூக அனுமதிப் பத்திரம்)
- 80% வரையிலான வங்கிக் கடன் வசதியுடன் இரண்டு சொத்துக்கள் கொள்வனவு செய்யலாம்.
- சுங்கத் தீர்வை மற்றும் விற்பனை வரிகள் இன்றி கார் ஒன்றினை கொள்வனவு செய்யலாம்.
- சிறுவர்களுக்கான உயர்தரம் வாய்ந்த கல்வி.

*இலவச ஆலோசனை*

**மொஹமட் ஹஃபீல் - 077 3266427**

39-1/A, ஷரபெரி கார்டன்ஸ் (மெரைன் டிரைவ்)
பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.


## கண்ணீர் அஞ்சலி

*யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஆரம்ப காலத் தலைவரும் உப தலைவரும் கரணவாய் வடக்கு ஐக்கிய நாணய சங்க முன்னாள் தலைவருமாகிய*

## V.K.சுப்பிரமணியம்

*அவர்கள் 2008.10.11 சனிக்கிழமை சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தலைவர், பணிப்பாளர்கள், மாவட்டச் செயலாளர், பணியாளர்கள்,
**யாழ்.மா.சி.க.கூ.சங்.சமாசம்.**

(சி/555418)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

எம்மோடு உறவாக 24.12.1981

எம்மை விட்டுத் தனியாக 31.08.2008



## கனகரத்தினம் நர்மதன்

எங்கேயோ பிறந்து எம்முடன் வந்து உறவாடி
எங்களைச் சிரிக்கவைத்த உறவே....
எப்படித்தான் உனக்கு மனம் வந்ததோ?
எங்களை விட்டுப் பிரிந்து செல்ல....
செல்லக் குழந்தையையும் அன்பு மனைவியையும்
தவிக்கவிட்டுச் சென்றதேனடா....?
வாழ்ந்த வாழ்வு போதுமென்றா சென்றுவிட்டாய்!
உன் வண்ணமுகம் இனி எங்கு காண்போமடா?

என்றும் உன் ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு உறவுகள், நல்லூர்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம், வவுனியா
## பிரயோக விஞ்ஞானபீடம்
## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தினால் வார இறுதி நாள்களில் நடத்தப்படவுள்ள இரண்டு வருட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா (வெளிவாரி) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் 31.10.2008ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**தகைமைகள்:**

1. விண்ணப்பதாரி க.பொ.த. (உ/த) பரீட்சைகளில் ஏதாவது துறையில் ஒரே அமர்வில் குறைந்தது 3 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரி க.பொ.த. (சா/த) பரீட்சைகளில் ஆங்கிலம், கணிதம் I அல்லது II பாடங்களில் திறமைச் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அல்லது

விண்ணப்பதாரி அரசாங்க திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்கள் அல்லது சட்ட நியதிச் சபையில் மேற்படி துறையில் மூன்று வருட வேலை அனுபவங்களுடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் I அல்லது II பாடங்களில் திறமைச் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அத்துடன்

2. வவுனியா வளாகத்தினால் நடத்தப்படும் பொது உளச்சார்புப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். (மேற்படி பரீட்சை வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் ஒரே நேரத்தில் நடத்தப்படும்)

மொழிமூலம்: ஆங்கிலம்

கற்கைநெறிக் காலம்: 2 வருடங்கள் - பகுதிநேர கற்கைநெறி

கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவத்தையும் விவரங்களையும் பெற்றுக்கொள்வதற்கு ரூ.100/- ஐ வவுனியா வளாக நிதிப் பிரிவில் செலுத்தி அல்லது சிரேஷ்ட உதவி நிதியாளர், வவுனியா வளாகம் என்ற பெயருக்கு வவுனியா தபாலகத்தில் மாற்றக்கூடியவாறு ரூ.100/- இற்கான காசுக்கட்டளையுடன் சுயவிலாசமிடப்பட்ட ரூ.30 முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை இணைத்து *சிரேஷ்ட உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம், பூங்கா வீதி* என்ற விலாசத்திற்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கற்கைநெறி சம்பந்தமான மேலதிக விவரங்களை வளாக இணையத்தளத்தில் (http://www.vau.jfn.ac.lk) பார்வையிடலாம். தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 024-2223317, 024-2222265 - Ext 213

*முதல்வர்,*
*வவுனியா வளாகம், வவுனியா.*
*10.10.2008*

(சி/555417)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் குணரத்தினம்

யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்து வந்தவருமான ஆறுமுகம் குணரத்தினம் 11.10.2008ஆம் திகதி கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் அருளம்மா - சின்னத்துரை (அரியாலை), தங்கலெட்சுமி - இராசையா (அரியாலை), தேவராசா (அரியாலை), தேவி - பரஞ்சோதி (கனடா), மலர் - நவரட்ணம் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இரத்தினம், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரவிலோற்சனன், ரவிலோற்சனி, ரகுலோற்சனி, ரகுலோற்சனன்,(பிரித்தானியா), ராஜ்லோற்சனன், ராஜ்லோற்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயவர்மன், ரவிச்சந்திரன், சாமுவேல், சாந்தி, மோகனா ஆகியோரின் மாமனும் சரண்யா, ராகவி, ராகுலன், நரேன், சுரேன், ஜோதிகா, ரிதிக்கா, சுருதி, இயலினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **Highland Funeral Home, 3280, Sheppard Ave East, Scarborough, Ontraio**இல் அமைந்துள்ள மண்டபத்தில் நேற்று (13.10.2008) திங்கட்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 9 மணிவரையும் பின்னர் இன்று (14.10.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் 1 மணி வரையும் அஞ்சலிக் காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியை 2 மணிக்கு **Mount Pleasant Cemetery, 375, Mount Pleasant Road, Toronto**இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் அறியத்தருகிறோம்.

*தொடர்புகளுக்கு:*
**(416) [illegible] (கனடா)**
**(416) 624 4164 (கனடா).** (79219)

தகவல்:
**தேவராஜா** *(சகோதரன்)*
*422/2, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி.:* **021 222 6273**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தளபதியின் பேரினவாதக் கருத்து; ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடுதான் என்ன?

**இலங்கை நாட்டை சிங்களவர்கள்தான் ஆளவேண்டும் - தமிழர்கள் அளவுக்கு மீறிய கோரிக்கைகளை முன்வைக்கக்கூடாது என்றவகையில் இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டிருந்தார் அல்லவா? அது தொடர்பாக 'த சண்டே லீடர்' பத்திரிகை கடந்த 05.10.2008 ஆம் திகதி தீட்டியிருந்த காரசாரமான தலையங்கத்தின் சாராம்சம் இங்கு தரப்பட்டுள்ளது.**

## கேள்வி எழுப்புகிறது 'த சண்டே லீடர்' பத்திரிகை

அண்மைக் காலமாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா செய்திகளில் அதிகமாக அடிபடுபவராக இருக்கிறார். இது அவரது இராணுவ சாதனைகள் பற்றியல்ல. சிங்கள மேலாதிக்கம் குறித்த அவரது நிலைப்பாடு பற்றியதாகும்.

எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல் அவர் தமது இளம் பருவகாலத்தில் தமிழர்களால் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை நினைப்பூட்டியிருந்தார்.

''எனக்கு இப்பவும் நினைவிருக்கிறது. தமிழர்கள் எமது கிராமத்தின்மீது தாக்குதல் நடத்தியபோது கிராமவாசிகள் மலைப் பகுதி ஒன்றுக்கு ஓடி ஒளித்துக்கொள்வார்கள். அமைதிநிலை ஏற்படும்வரை நாங்கள் அங்கேயே இரண்டு, மூன்று தினங்கள் தங்கியிருப்போம்'' - என்று தெரிவித்துள்ள இராணுவத் தளபதி எவரும் மலையிலிருந்து கீழே குதித்தார்கள் என்று சொல்லவில்லை.

அவர் இப்போது எதிர்ப்பாளராய் இருப்பதில் ஆச்சரியமில்லை. இப்போது அந்தக்

## பொன்சேகாவின் தேசப்பற்றும் அமெரிக்காவுக்கான விசாவும்

குழப்படிக்காரத் தமிழருக்கு ஒரு பாடம் படிப்பிக்கக்கூடிய வகையில் அவர் வளர்ந்துவிட்ட பையன் என்பது மகிழ்ச்சியாக இருக்கும். என்னோடு வைத்துக்கொண்டீர்களோ தொலைத்துவிடுவேன் என்று கூறுவது போலிருக்கிறது அவரது கூற்று.

தமிழர்களின் இம்சைக்குள்ளான நிலையில் அவர் ஐம்பது வருடங்களாகக் காத்திருந்துள்ளார். 2006ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் திகதி அவர் தன் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் புலிப்படை உறுப்பினர் ஒருவர் அவருடைய கார் மீது நடத்திய தாக்குதலில் உடல் ரீதியாகப் படுகாயமடைந்தார். முதலில் அந்த சிறுவயதுத் தாக்குதல்; இப்போது இந்தத் தாக்குதல்.

தமிழர்களின் தாக்குதலுக்குத் திரும்பத் திரும்ப உள்ளானதால் அவற்றின் அடையாளங்கள் அவரில் பதிந்துபோயுள்ளன. இன்னொரு கன்னத்தையும் திருப்பிக் காட்டும் நிலையில் அவர் இல்லை. அது அவருக்குள் இருந்த சிங்கள பேரினவாதத் தன்மையை வெளியில் கொண்டுவந்துவிட்டது. ஹிட்லரின் உள்ளூர் செயற்பாட்டாளர்களான ஹெல உறுமயவின் செல்லப்பிள்ளையாகவும் அவர் ஆகிவிட்டார்.

''இந்த நாடு சிங்கள சமூகத்தவர்களால்தான் ஆளப்படும்'' - என்று அவர் சமீபத்தில் கூறியிருக்கின்றார். ''அவர்கள்தான் பெரும்பான்மையினர். சனத்தொகையில் 74 வீதத்தைக் கொண்டிருக்கிறார்கள்.''

இதைக்கூறிய கையோடு தாம் ஒரு பணியில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டுள்ளார். தனது எஜமானருக்கு இது சற்றுச் சிக்கலை ஊட்டுவதாகத்தான் இருந்திருக்கும்.

அவருடைய எஜமானர் கோத்தபாய ராஜபக்ஷ (அவரும் கூட புலித் தற்கொலைதாரி ஒருவரின் தாக்குதலில் இருந்து தப்பியவர்) தமிழ்ப் பொதுமக்கள் இராணுவத்தினரால் கொல்லப்படுவது குறித்துப் பின்வருமாறு தெரிவித்திருந்தார்:

''எங்களுக்குத் தெரியும். தமிழ்மக்கள் அனைவருமே பயங்கரவாதிகள் அல்லர். அதேபோல், பயங்கரவாதிகளில் அநேகமானவர்களும் தமிழர்களே. பயங்கவரவாதிகளில் 98 வீதமானவர்கள் தமிழர்களே... இராணுவ நடவடிக்கை என்று வரும்போது தமிழ்ச் சமூகத்தினரும் இலக்காகத்தான் செய்வார்கள்.''

பொன்சேகாவும் ரராஜபக்ஷவும் ஒரே பாட்டைத்தான் இப்போது பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

''இந்த நாடு சிங்களவர்களுக்கே சொந்தமானது என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால், சிறுபான்மைச் சமூகங்களும் இருக்கின்றன. அவர்களை எங்கள் மக்களைப் போல நடத்துகிறோம்'' என்று அண்மையில் பொன்சேகா கனேடிய 'நாஷனல் போஸ்ட்' என்ற பத்திரிகைப் பேட்டியில் கூறியிருக்கிறார். இருவருக்கும் ஆதரவாளர்கள் இல்லாமலில்லை. பொன்சேகாவின் கருத்தை அப்படியே ஆதரித்துக் கூறியுள்ளது ஹெல உறுமய.

### தனித்துவமான தேசிய உரிமை

''புத்திஜீவிகளாலும் ஆராய்ச்சியாளர்களாலும் இந்த உண்மை நிரூபிக்கப்பட்டுவிட்டது. சிங்கள மக்களின் நாடு இலங்கை. அவர்கள்தான் அதன் வரலாற்றையும் நாகரிகத்தையும் கட்டியெழுப்பியவர்கள். ஏனைய இனத்தவர்களுக்கு இங்கு பிரஜாவுரிமை உண்டு. ஆனால், சிங்கள மக்களுக்குத்தான் தனித்துவமான தேசிய உரிமை உண்டு'' என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஓமால்பே சோபித்த தேரர் கூறியிருக்கிறார்.

இதுகாலவரை அவர் தேசிய உரிமை என்பது என்ன என்பதையோ, யார் அந்தப் புத்திஜீவிகளும் ஆராய்ச்சியாளர்களும் என்பதையோ விளக்கிக் கூறவில்லை.

பொன்சேகாவின் கருத்துப்படி 74 வீதமான சிங்கள பெரும்பான்மையினரால்தான் இலங்கை ஆளப்படவேண்டும் என்றால், அமெரிக்காவில் 13.4 வீதமே உள்ள அமெரிக்க கறுப்பு இனத்தவரான பெரக் ஒபாமா எவ்வாறு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய அளவுக்கு அருகாமையில் வந்திருக்கமுடியும்? இந்த விடயங்கள் பற்றி பொன்சேகாவின் கருத்து என்னவென்று யாம் அறியோம். ஆனால், நவம்பர் 04ஆம் திகதி நடக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா தேர்ந்தெடுக்கப்படுவாரோ, இல்லையோ அவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியுள்ள ஜனநாயகக் கட்சியை நாம் பாராட்டுகிறோம்.

ஒபாமா விடயம் பொன்சேகாவுக்கு நன்றாகத் தெரிந்திருக்கத்தான் வேண்டும். ஏனென்றால் அவரே சுயநலமற்ற தேசியப் பற்றின் காரணமாக அமெரிக்காவில் போய் குடியேறுவதற்கு விண்ணப்பம் செய்திருக்கிறார். தான் நேசிக்கும் சிறிலங்காவையும் தனது பெரும்பான்மை சிங்கள சகோதரர்களையும் கைவிட்டுவிட்டு போவதற்கு! என்ன தெரிகிறது உங்களுக்கு? அமெரிக்கர்கள் அவருக்கு ''கிறீன்காட்'' வழங்கியிருக்கிறார்கள். இதன் நுட்பக்கருத்து என்னவென்றால் காத்திருக்கவும் என்பதாம். இதன் மீது அவருக்கு ''டைவேர்சிட்டி'' (Diversity) விசா கிடைக்கும். உலகிலேயே பதவியில் இருந்து கொண்டே வேற்று நாடொன்றில் தங்கி வாழ்வதற்கான விசாவுக்கு விண்ணப்பித்து அதனைப் பெற்றுக் கொண்டுள்ள ஒரே தேசப்பற்றுள்ள இராணுவத்தளபதி பொன்சேகாவாகத்தான் இருக்கமுடியும். இந்த மனிதருக்குத்தான் சிறிலங்காவின் மிக உயர்ந்த விருதுகளான ரணவிக்கிரம பதக்கம், தேச புத்திர சம்மானய ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் 74 வீதம் வெள்ளையர்கள் இருக்கிறார்கள். (இலங்கையில் 74 வீதம் சிங்களவர் போன்று) பொன்சேகாவின் சொந்த வரைவிலக்கணப்படி அங்குபோய் இரண்டாம் நிலைப்பிரசையாக இருப்பது பற்றி அவருக்கு சங்கடம் ஒன்றுமில்லை. எமது மண்ணின் தேசப்பற்றுள்ள ஒரு மகனாக அவரைப் பார்க்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

### போர்த்துக்கேயருக்கு முன் வந்த தமிழர்

எந்தவிதத்தில் பொன்சேகா தனது வாதத்தை நிலைநாட்ட முயன்றாலும் அவரும் கூட ஒரு பன்மைத்துவ தன்மை கொண்டவர்தான் என்பது உண்மையாகும். அவருடைய பொன்சேகா என்ற பெயரை எடுத்துக்கொண்டால் 'டா பொன்சேகா' (da Fonseca) என்பதன் திரிபாகும் அது. இலங்கையின் கரையோரப் பகுதிகள் போர்த்துக்கேயரால் ஆளப்பட்ட காலத்தை நினைவுறுத்துவதாகும். அதில் வெட்கம் ஒன்றுமில்லை. அவரது அந்நியப் பெயரின் காரணமாக அவர் ஒரு தகுதி குறைந்த இலங்கையர் என்று நாம் கருதவில்லை. ஆனால், நாம் நினைவில் கொள்ளவேண்டியது: யோகலிங்கம், செல்வநாதன் மற்றும் ஆறுமுகம் என்பவை பொன்சேகா என்பதை விட அதிக இலங்கைத் தன்மை கொண்டவை என்பதில் கேள்விக்கு இடமில்லை என்பதுதான். எதுவானாலும் தமிழர்கள் உண்மையில் போர்த்துக்கேயர்களுக்கும் டா பொன்சேகாக்களுக்கும் முன்னதாகவே இங்கே இருந்துள்ளார்கள். பொன்சேகாவின் கருத்துகள் தனித்துவமானவையும் அல்ல; புதியவையுமல்ல. கடந்த வாரத்தில்தான் டிங்கிரி பண்டா விஜயதுங்காவின் கட லத்தை நாம் அடக்கம் செய்தோம். அவருடைய கருத்துகளும் பொன்சேகாவின் கருத்துகளுக்கு சமமானவையே. சிங்கள மேலாதிக்கத்தை வெளிப்படையாக வெளியிட்ட ஒருவர் அவர். குறிப்பிடக்கூடிய கல்வியறிவு இல்லாத அவரை ரணசிங்க பிரேமதாச பிரதமராக நியமித்திருந்தார். பிரேமதாசவின் மரணத்தையடுத்து ஜனாதிபதியானார். அவர் காலத்தில்போல் வேறு ஒருபோதும் நாட்டில் ஊழல்கள் மலிந்திருக்கவில்லை.

ஜனாதிபதி விஜயதுங்காவின் பிரபல்யமான ஒரு கருத்து என்னவென்றால், ''சிறுபான்மை இனங்களுக்காகப் பெரும்பான்மை மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மரம் உறுதியாக இருந்தால் கொடிகள் அதில் படர்ந்து வளரமுடியும்''

அவர் கருத்தை சிறுபான்மையினர் ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுக்கு முற்றும் எதிராக அவர்கள் வாக்களித்தார்கள்.

இப்பொழுது ஐ.தே.க. சீர்திருத்தத்திற்குள்ளாகி வருவது தெரிகிறது. அவர்கள் உதவித் தலைவரை நியமிக்கவும் நிழல் அமைச்சரவையொன்றை உருவாக்கவும் முயன்று வருகிறார்கள். கட்சியில் எஞ்சியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவிகளுக்குப் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பொதுமக்கள் அறிய விரும்புவது என்னவென்றால், சிறிலங்காவின் அரசியலில் சிங்களவர் மேலாதிக்கம் வகிக்க வேண்டும் என்ற பொன்சேகாவின் கருத்து குறித்து ஐ.தே.க. முக்கியத் தலைவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதே.

### வெட்கத்தைப் பதிவு செய்கிறோம்

ரணில் விக்கிரமசிங்க, திஸ்ஸ அத்தநாயக்க, சஜித் பிரேமதாச - பெரிதாகப் பேசுங்கள் நீங்கள் பேசுவது கேட்கவில்லையே.

ஒருவேளை அவர்களும் பொன்சேகாவின் கருத்துக் குறித்த விடயத்தில் பக்கத்தை மூடிவிட்டார்களோ என்னவோ!

பெரும்பான்மையினரோ, சிறுபான்மையினரோ எம்மைப் பாராட்டவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. பொன்சேகாவின் அகௌரவமான கருத்துகள் குறித்த எமது வெட்க உணர்வைப் பதிவுசெய்ய விரும்புகின்றோம்.

அவரைப் போன்ற உயர் அதிகாரிகளும் முதுகெலும்பில்லாத பிராணிகளே வெட்கித் தலைகுனியும்படியான எதிர்க்கட்சியினருமுள்ள இந்த இலங்கை நாட்டின் - இன்றைய நிலைமை ஆச்சரியத்துக்குரியதன்று.

பொதுவாழ்வில் நல்லாட்சியும் பொறுப்புக் கூறும் தன்மையும் உறுதிப்படும் வகையில் சிலபல காரியங்களையும் புரிந்து வரும் உயர் நீதிமன்றம் நன்றிக்குரியது.

மக்களிடமும் இலங்கை நாட்டின் சகல நிபந்தனையற்ற முறையில் பொன்சேகா மன்னிப்புக் கோரவேண்டும். இல்லையெனில் அவர் தமது விசாவை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு அமெரிக்கா போய்விடவேண்டும்.

இதுவே அவருக்கு உறைப்பாகக் கூறப்படவேண்டியது. (ப)

---

**அமெ. குடியுரிமை பெற்ற பஸிலுக்கு கிழக்கு மக்கள் குறித்துப் பேச உரிமை இல்லை**

# கிழக்கு மக்களின் பிரதிநிதியா கருணா? வன்மையாகச் சாடுகிறது கூட்டமைப்பு

கொழும்பு,ஒக்.14

கிழக்கு மக்களுக்கு தேசிய ரீதியில் அங்கீகாரம் வழங்கவே கருணாவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டதாக ஜனாதிபதியின் சகோதரரும் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

அரச ஊடகமொன்றுக்கு பஸில் ராஜபக்ஷ மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளமைக்கு கண்டனம் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்கு மாகாண மக்கள் தமது அரசியல் மற்றும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இருந்து என்றுமே தளர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் எந்தவொரு சலுகைகளுக்கும் சோரம் போபவர்களும் கிடையாது. ஆனால் சிங்களப் பேரினவாத அரசைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ள கருத்து ஒட்டுமொத்த கிழக்கு தமிழ் மக்களையும் புண்படுத்தும் செயலுடன் அவர்களைக் கொச்சைப்படுத்துவதுமாகும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தமிழ் மக்களினால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். அவர்களுக்கு மாத்திரமே அம்மாகாணத்தின் தமிழ் மக்கள் தொடர்பாகப் பேசுவதற்கான உரிமை உண்டே தவிர அமெரிக்காவின் குடியுரிமை பெற்றவரும் தென் பகுதியில் மக்களினால் தெரிவு செய்யப்படாத அரசியல் வாதியுமான ஜனாதிபதியின் சகோதரர் பஸில் ராஜபக்ஷவுக்கு கிழக்கு மக்கள் பற்றிப் பேசுவதற்கு எந்த வித உரிமையும் கிடையாது.

அண்மைக்காலத்தில் கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் எவ்வாறு நடைபெற்றன என்பது அங்குள்ள மக்களுக்கு மாத்திரமில்லாமல் உலகத்துக்கே நன்கு தெரியும். அத்தேர்தல்கள் ஜனநாயக விரோதமான முறையிலேயே நடைபெற்றன.

### மொட்டைத் தலைக்கும் முழங் காலுக்கும் முடிச்சுப் போடும் கதை

ஆனால் கருணாவை நாடாளுமன்ற உறுப்பினராக்கியவர்கள் கிழக்கு மக்களல்லர். அம்மக்களுக்கு இதில் எந்தவித சம்பந்தமுமில்லை. அரசு தனது பொய் பிரசாரத்திற்காக கருணாவை தேசிய பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தது. இதை வைத்துக்கொண்டு கிழக்கு மக்களுக்கு தேசிய ரீதியில் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ கூறுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் கதையாகும். இதன் மூலம் கிழக்கு மக்களை ஏமாற்றிவிடலாம் என யாரும் நினைத்தால் அது தப்புக்கணக்காகும்.

இப்பொழுது கிழக்கில் என்ன நடைபெறுகின்றது? கிழக்கில் நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர் தினமும் கொலை,கொள்ளை, ஆள் கடத்தல், கைது, சுற்றிவளைப்பு, சோதனை, பாலியல் வல்லுறவு,கப்பம், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்போர் கொலை செய்யப்படுதல், தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைத்தல் போன்ற சம்பவங்களே அதிகரித்தவண்ணம் உள்ளன. இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ கூறும் பதில் என்ன? கிழக்கு மக்கள் படையினரினதும் மற்றும் ஆயுதக்குழுவினரினதும் நடவடிக்கைகளினால் மிகவும் வேதனையுடனும் துன்பத்துடனும் தமக்கு நடப்பவற்றை வெளியில் கூற முடியாதவாறு அரச பயங்கரவாதத்தினால் அடக்கப்பட்டுள்ளனர். இதுவே கிழக்கின் தற்போதைய யதார்த்தமாகும்.

கிழக்கு மக்கள் என்றுமே பேரினவாத அரசை நம்பப்போவதில்லை. இதுதான் கடந்த கால வரலாறு. தமிழ் மக்கள் இணைந்த வடக்குக் கிழக்கே தமிழர் தாயகம் என்பதில் உறுதியுடன் உள்ளனர். அதில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. இதை நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ புரிந்துகொள்ள வேண்டும். - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி வல்லிபு

# சமுத்திரத் தீர்த்தத் திருவிழாக்



## மச்சமாக வங்கங்கடலில் தோன்றிய மகா விஷ்ணு

ஈழத்திருநாட்டில் ஈடுஇணையற்ற வைணவத் திருத்தலங்களில் முதன்மையான திருத்தலமாக விளங்குவது ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயம்அன்னியர் ஆட்சியிலும் ஈழப்போர் நடைபெற்ற காலங்களிலும் எதுவித இடையூறுகளும் இன்றி எல்லா மதத்தவர்களாலும் வழிபடப்பட்டு இந்து மதத்தைத் தன்னிகரற்று வளர்த்தெடுத்த பெருமை கொண்டது.

மூலஸ்தானத்தில் விஷ்ணுவின் சக்கராயுதத்தை வைத்து வழிபடும் சிறப்புக்குரியது. இந்த ஆலயத்தின் கிரியைகள் சைவ ஆகம முறைப்படி நடைபெறுவது விசேடமாகக் குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும் பக்தர் கூட்டம் நிறைந்து எம் பெருமானுக்கு விசேட பூசைகள் செய்யப்பட்டு வீதி வலம் வரும் திருக்காட்சியும், ஸ்ரீராமநவமி, ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி, ஏகாதசி போன்ற சிறப்புமிகு உற்சவங்கள் வெகு விமரிசையாக இடம்பெறுவதும் சிறப்பு அம்சங்களாகும்.

ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவமூலம் நாட்டில் மும்மாரிபெய்து மக்கள் நல்வாழ்வு வாழவும், நாட்டில் சமாதானமும் - சுபீட்சமும் கிட்டவும் வாய்ப்பு அமைகின்றன. மகோற்சவ பெருவிழா இத்தலத்தில் புரட்டாதி மாதம் பௌர்ணமி தினத்தை சமுத்திர தீர்த் தோற்சவமாகக் கொண்டு 17 தினங்கள் நடைபெறுகின்றன. இதில் வெண்ணைத்திருவிழா, துகில்திருவிழா, பாம்புத் திருவிழா, கம்சன் திருவிழா ஆகிய உற்சவங்கள் கண்ணபிரானின் திருவிளையாடல்களை எடுத்தியம்பும் அருட் காட்சியாக அமைவன. ஆலயத்தின் சிறப்புமிகு உற்சவமான சமுத்திர தீர்த்தம் மகாவிஷ்ணு மச்சமாக வங்கக்கடலில் தோன்றியதை நினைவூட்டுவதாகும். அன்றைய நாளே இந்நாள். அதன் வரலாற்றைச் சற்று நோக்குவோம்.

வல்லிநாச்சியார் வராத்துப்பளை ஊரைச் சேர்ந்தவர். வராத்துப்பளை கற்கோவளத்தின் ஒரு பகுதியாகும். வல்லிநாச்சியார் கன்னியாகவே காலம் கழித்தார். பசுக்களை வளர்த்து பாதுகாத்தலே அவர் பணியாகியது. கள்ளமில்லா வெள்ளையுள்ளமுடைய வல்லிநாச்சியார் நாராயணன் மீது அன்புகடந்த பக்தியுள்ளவர்.

இவ்விதம் வல்லிநாச்சியார் வாழும் காலத்தில் வங்கக்கடலோர கற்கோவளத்து மீனவர்களுக்கு ஒரு விநோத மீன் துள்ளிக்குதித்து அதிசய விளையாட்டைக் காட்டி வந்தது. வல்லிநாச்சியின் கனவிலும் இது பற்றிய காட்சி தென்பட்டது. மறுநாள்காலை ஒரு வெள்ளிக்கிழமை புனிதமாக நீராடிவிட்டு வங்கக்கடற்கரைக்குச் சென்று நீராடி பக்தி கீதம் பாடி "கண்ணா! கோவிந்தா, கோபாலா" என உரக்கக் கண்ணன் திருநாமங்களை உச்சரித்தும் குறிப்பிட்ட அந்த விநோதமீன் வல்லிநாச்சியாருக்குத் தென்படவில்லை. மறுநாள் காலையிலும் அதேபோல் நீராடிவிட்டு கடற்கரைக்குச் சென்று முன்போல் கண்ணபிரானை வேண்டியபோது அப்பிராட்டியின் மடியில் அம்மீன் வந்து விழுந்ததும் மறுகணம் அழகிய ஆண்குழந்தையாக மாறியது. அந்தக் குழந்தையை அணைத்து எடுத்து வருகையில் அந்தப் பெண்மணி மயங்கி விழுந்தார்.

மீன் பிடிக்க வந்தவர்கள் வலையைத் தொட்டிலாக்கி குழந்தையை அதில் வைத்துத்தூக்கி வரும்போது களைப்புற்ற தாய் தாகசாந்தி செய்ய விரும்பினார். தற்போது ஆலயம் அமைந்த இடத்திலேயே தொட்டிலை வைத்தனர். தாகசாந்தி செய்ததும் மீண்டும் தொட்டிலைப் பார்த்தபோது குழந்தை திடீரென மறைந்துவிட்டது. அந்த இடத்தில் கிழப்பிராமணரொருவர் தோன்றி வல்லிநாச்சியாரிடமும் மீனவர்களிடமும் ஒரு சக்கரத்தைக் கொடுத்து அதனை பூஜிக்கும்படி கூறிச் சென்றார்.

அதன்படி அவர்கள் சிறுகொட்டில் ஒன்று அமைத்து சக்கரத்தையும் ஸ்தாபித்து விளங்கு வைத்து வந்தனர். இந்த அற்புதத்தால் ஈர்க்கப்பட்ட பொது ஜனங்கள் மிகுந்த ஈடுபாட்டோடு வழிபாடு மேற்கொண்டு வந்தனர். இந்த வழிபாடே இன்றும் இவ் ஆலயத்தில் காணக் கூடியதாகவுள்ளது.

இன்றையதினம் பக்தியும் மகிழ்ச்சியும் பொங்கும் திருநாள். ஈழத்து இந்துக்களின் தீர்த்தப்பெருவிழா. மாயவனை விரும்பி வழிபடும் அடியார்கள் காதலால்

அடிய
களை
பிணி


அசல் 22 கரட்டில் உத்தரவாதத்துடன் புத்தம் புதிய நவீன் டிசைன்களிலான அழகிய தங்க, ஆபரணங்களுக்கு உண்மை, நேர்மை நாணயமிக்க சிறந்த இடம்.

விஷ்ணு ஜுவல்லறி

181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(வின்சர் தியேட்டர் முன்பாக)



மந்திகையில் புதியதோர் உதயம்

நியூ நதி கிறீம் கவுஸ்

சிலையடி, சாவகச்சேரி வீதி,

மந்திகை.

பாடசாலை உபகரணங்க

காகிதாதிகள், எழுது கருவி

பத்திரிகைகள் விற்பனை

நாவலர் புத்தகசா

சிலையடி, மந்தி கை

நெல்லியடி கிளினிக்

பொன் கந்தையா வீதி, நெல்லியடி.

★ தினசரி M.B.B.S. வைத்தியர்களின் சேவை

பி.ப. 4 மணி முதல் மாலை 7 மணிவரை

★ விசேட வைத்திய நிபுணர் சேவை

(ஞாயிற்றுக்கிழமைகளில்)

சத்திரசிகிச்சை நிபுணர்

பொது வைத்திய நிபுணர்

குழந்தை வைத்திய நிபுணர்

மகப்பேற்று வைத்திய நிபுணர்

இருதய சிகிச்சை நிபுணர்

காது - மூக்கு - தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர்

★ ஆய்வு கூடப் பரிசோதனைகள்

தொடர்புகளுக்கு:

திருநடனமுருகன் மருந்தகம்

நெல்லியடி. தொ.பே:- 021 226 4277

வெற்றிலை, பாக்கு, சீவல், புகையிலை,

சுருட்டு வகைகள் மொத்தமாகவும்,

சில்லறையாகவும் கிடைக்கும்.

அன்ரன் வெற்றிலைக் கடை

உரிமையாளர்: நடராசா

பொதுச் சந்தை,

சாவகச்சேரி வீதி, மந்திகை.

சந்நிதியான் ஆச்சிரம

கலைப் பண்பாட்டுப் பே

சந்நிதியான்

ஆச்சிரமம்

தொண்டைமானா

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கோப் சிற்றி

சகல விதமான பொருள்கள் நியாயமான விலையிலும்,

தரமான பொருள்கள் குழந்தைகளின் பால் மா வகைகள்,

கோயில் பொருள்கள், பிஸ்கட் வகைகள் மற்றும்

அத்தியாவசியப் பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம்.

முகாமையாளர், பணியாளர்கள்,

கோப்சிற்றி, உடுப்பிட்டி.

பலசரக்கு மொத்த, சில்லறை

விற்பனையாளர்

ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடேர்ஸ்

ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

சிவராம் மெடிசின்ஸ் & சேஜெரி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.

தினமும் M.B.B.S. வைத்தியர்கள் பார்வையிடுவர்.

ஆய்வுகூட வசதி

(அனைத்து இரத்த, சல பரிசோதனைகளும் செய்துகொள்ளப்படும்)

ஈ.சீ.ஜீ. (E.C.G) வசதி

வைத்திய நிலையம் தினமும் காலை 8 மணி முதல்


மாலை 6 மணிவரை திறந்திருக்கும்.

விரைவில் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புர ஆழ்வார் ஆலய
## ...ாத் சிறப்புமலர் 14.10.2008





கண்ணீர் மல்கி உடல் நலம் பெற்று பேரானந்தம் மேன்மேலும் பெருக சங்கு-சக்கரம்!, கோவிந்தா-கோபாலா!, மாயவா - கேசவா! என்று அன்புருகி நிக்க ஆலயத்தில் இருந்து தீர்த்தக்கரைக்குச் சுமார் 31/2 மைல் தூரத்துக்கு மணற் குன்றுகள் ஊடாகக் கால்நடையாக முன்பெல்லாம் (இரண்டு ஆண்டுக்கு முன்) யாத்திரை செய்யும் காட்சி மனம் குளிரவைக்கும். ஸ்ரீ மகாகணபதி, ஸ்ரீ மகாஇலட்சுமி, ஸ்ரீ ஆஞ்சநேயர் சகிதம் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் ஆகிய தெய்வவிக்கிரகங்களை இந்தப் பாதையூடாக கற்கோவளப் பகுதி அடியார்கள் கடுகதியாகத் தூக்கிச் செல்வர்.

கோவிந்தா, கோபாலா, மாயவா, மதுசூதனா எனும் நாம ஒலி அவர்கள் வாய்களில் இருந்து எழும்பும். இது பார்ப்போரைப் பரசவசப்படுத்தும். அத்தோடு கூன்கொண்டு வந்தவர் கூட - தான் நிமிர்ந்து ஓடும் அளவுக்குத் தீர்த்தக் கரைநோக்கி அவ்வளவு உற்சாகமாகச் செல்வர். வங்கக் கடற்கரைக்கு வல்லிபுர ஆழ்வாரைத்தூக்கிச் செல்பவர்கள் வல்லி நாச்சியரையும்மாயவரையும்(குழந்தை) தூக்கிவந்த வழிவந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்திருநாட்டில் பிரசித்தி பெற்ற திருத்தலங்கள் பலவும்சமுத்திரத்தினைத்தீர்த்தமாடும்தலமாகக்கொண்டுள்ளன. அந்தவகையில் வல்லிபுரத்திலும் பாக்கு நீரிணையினையும் வங்காள விரிகுடாவினையும் இணைத்திருக்கும் தீர்த்தக் கடலில் சக்கரத்தாழ்வாருக்கும் ஆஞ்சநேயருக்கும் அபிசேக, ஆராதனை செய்யப்பட்டு படகில் ஏற்றப்பட்டு தீர்த்தமாடுவர். இதனைத் தொடர்ந்து அடியார்கள் நோய், பிணி நீங்க, பாவங்கள் நீங்க பக்த கோடிகளும் பாவங்களைத் தீர்த்தோம், துயரங்களைத் தீர்த்தோம், துன்பங்களைத் தீர்த்தோம், பிணிகளைத் தீர்த்தோம், நோய்களைத் தீர்த்தோம் என வங்கக்கடலில் தீர்த்தமாடி, பாவ விமோசனமடைவர். இந்தக் காட்சியைக் கண்ணால் கண்டிட சமுத்திர அலைகளை விஞ்சுமளவுக்கு அடியார் கூட்டம் லட்சோபலட்சமாக ஒன்றுகூடி மாயவனைத் தொழுது துதிப்பர்.

> ஒருத்தி மகனாய்ப்பிறந்து, ஓரிரவில்
> ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
> தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைந்த
> கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
> நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
> அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்
> திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
> வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.
>
> -திருப்பாவை.

ஆலயங்கள் யாவும் தீர்த்தோற்சவத்தை அடிப்படையாகக் கொண்டே மகோற்சவத்தைத் தீர்மானிக்கின்றன. இது மகோற்சவங்களில் தீர்த்தோற்சவத்தின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன. இந்த வகையில் வல்லிபுரமும் விதிவிலக்கன்று. அத்தோடு வல்லிபுரக் கோயிலில் இரண்டு தீர்த்தோற்சவம் நடைபெறுவது விசேடித்துக் கூறக்கூடியதாக மட்டுமன்றி எவ்வாலயத்திலும் இச் சிறப்பினைக் காண முடியாது. இன்று சமுத்திரத்தீர்த்தம் அமைய நாளை ஆலய வீதியில் மேற்குப் புறம் அமைந்த கேணியில் தீர்தோற்சவ கிரியைகள் நடை பெற்றுக் கேணித்தீர்த்தம் இடம்பெறும். ***

ஓம் நமோ நாராயணா!

க. அருட்செல்வம் JP, (யாழ். பல்கலைக்கழக மாணவன்) பொதுச் செயலாளர்,
பெரியாழ்வார் ஆச்சிரமம், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்.


**12 % க்கு அதிகமான வருடாந்த வருவாய்***

கொமர்ஷல் வங்கி வழங்கும் சுப்பர் சேவர்சேமிப்புக் கணக்கு உயர்ந்த நன்மைகளை வழங்குகின்றது.

★ வைப்பு மீதியில் 80 விதம்வரை விரைவான கடன் (விசேட வட்டி வீதத்துடன்)
★ உடனடி CAT கார்ட் / உடனடி டெபிற் கார்ட் இலவசம்.
★ பணம் மீள் பெறுவனவு எண்ணிக்கைகளுக்கு வரையறை கிடையாது.
★ வைப்புப் புத்தகம் தேவையில்லை.
★ இன்டர் நெட் வங்கிச் சேவையின் ஊடாக 24 மணி நேரமும் கொடுக்கல் வாங்கல் செய்யமுடியும்.

ஆகக் குறைந்த ஆரம்ப வைப்புத் தொகை ரூ.50,000/-

COMMERCIAL BANK Super saver

கொமர்ஷல் வங்கிக்கே உரித்தான உயர்ந்த நம்பிக்கையும், உறுதிப்பாடும், தனித்துவமான சேவைகளுடன்....

*வருடாந்த விளைவு வீதம் 12.65 வீதம்.

www.combank.lk

கொமர்ஷல் வங்கி



...உபகரணங்கள்,
...எழுது கருவிகள்,
...விற்பனையாளர்
...த்தகசாலை,
...மந்திகை.

சிறி சிவாஞ்சனா நகையகம்
149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5431, 9227.

உள்ளூர், வெளியூர் தொலைபேசி
பக்ஸ், போட்டோக் கொப்பி
சேவைகளுக்கு
அம்பிகை தொலைத் தொடர்பு நிலையம்
சாவகச்சேரி வீதி,
மந்திகை.
தொ.பே: 021 226 3115, 021 226 3051

இந்து இளைஞர் சங்கம்,
பருத்தித்துறை.

அம்பிகை களஞ்சியம்
பல்பொருள் அங்காடி,
சாவகச்சேரி வீதி,
மந்திகை.

...ஆச்சிரம சைவ
...பாட்டுப் பேரவை
...தியான்
...ச்சிரமம்
...டைமானாறு.

துர்க்கா
நகைப் பூங்கா
71, கன்னாதிட்டி,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சகல விதமான ஆடை வகைகளுக்கு
கேசவன் சில்க்
சாவகச்சேரி வீதி,
மந்திகை.
கிளை: மத்திய சந்தை,
நெல்லியடி.

VANAHAM PHONE COMPUTER CITY
சகல விதமான கைபடக்கத் தொலைபேசிகளையும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களையும் மற்றும் கணனிகளையும் கணனிசார் உதிரிப்பாகங்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் நம்பிக்கையான இடம்
◆ சகல விதமான கைபடக்கத் தொலைபேசிகளையும் மற்றும் கணனிகளையும் சிறந்த முறையில் திருத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
◆ Software, MP3, Video போன்றன போட்டுக்கொடுக்கப்படும்.
◆ நீங்கள் வாங்கும் கணனியுடன் இலவச இன்டர்நெற் இணைப்பு வழங்கப்படும்.
No: 04, 05, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (அன்னை நாகா பூட்சிற்றி முன்பாக)
Tel: 021 222 8990
0777238588

பார்த்தீபா பஜாஜ் அன் மோட்டர்
உதிரிப்பாக விற்பனை நிலையம்
(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் அருகாமை)
முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கில் உதிரிப்பாகங்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சகல விதமான அச்சு வேலைகளையும் கணனி, ஒவ்செற், ஸ்கிறீன் பிறின்டிங் மூலம் அமைத்துத்தர நாட வேண்டிய ஒரே இடம்
தமிழ்ப் பூங்கா அச்சகம்
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பேசி. 021 226 4014

ராஜு ஸ்ரோர்ஸ்
67,69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெகா மோட்டோர்ஸ்
ஹாட்வெயர்
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள், பக்ஸ், போட்டோ கொப்பி, லெமினேட் சேவைகளுக்கு
ஸ்ரீ அம்பாள் தொலைத்தொடர்பு நிலையம்
சிலையடி,
மந்திகை.
தொ.பே: 021 226 3111.

எரிக்கணேஸ்
பல், மூக்குக் கண்ணாடி அகம்
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

வாதம், மூட்டுவலி, இடுப்பு வலி, தசைப்பிடிப்பு, சிக்குன் குனியா போன்ற நோய்களுக்கு சிகிச்சை வழங்குவோர்
யோக மருத்துவ நிலையம்
பிரதான வீதி, சாரையடி,
பருத்தித்துறை.

சகல விதமான மருந்து வகைகள்,
பாலுணவு வகைகளுக்கு
மந்திகை பார்மஸி
மந்திகை, புலோலி.

தரமான பாண், பணிஸ், கேக், பிஸ்கட் வகைகளுக்கு
கிருஸ்ணா வெதுப்பகம்
சாவகச்சேரி வீதி,
மந்திகை, புலோலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணக வாழ்வின்

## 31ஆம் நாள் நினைவுகூரல்



அமரர்
**மேசி கமலம் இராஜசேகரம்**

மண்ணகத்தில்: 17.04.1923
விண்ணகத்தில்: 15.09.2008

"வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம்
இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்"
(உரோ:14.8)

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று 14.10.2008 முற்பகல் 10.30 மணிக்கு கோப்பாய் மரியன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பருத்தித்துறை வீதி,
கோப்பாய் மத்தி. [79199]

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்

மனம் மகிழ 29 * 11 * 1938



மனம் நெகிழ 07 * 10 * 2006

அமரர் லயன்
**கதிர்காமத்தம்பி நாகராசா (J.P.)**
[இளைப்பாறிய அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, யாழ்.மாவட்ட இணைப்பாளர், இந்துக் கலாசார திணைக்களம், சமூகசேவைகள் அமைச்சு]
திதி:பூரணை (14.10.2008)

கனிவான உங்கள் முகமும் பணிவான தங்கள் பேச்சும்
துணிவான உயர்செயலும் தணிவான இன் சொல்லோடும்
வாழ்ந்த நீங்கள் மேனிவிட்டகன்று வருடம் இரண்டோ?
எமது தெய்வத்தின் இரண்டாம் ஆண்டு நினைவில்

8ஆம் கட்டை,
K.K.S. வீதி, மல்லாகம்.

ஆத்ம சாந்திக்கு என்றும் இறைவனை வேண்டி நிற்கும்:
குடும்பத்தினர்.

## கருணாலய சிறுவர் இல்லத்தில் சிறுவர்தின நிகழ்வுகள்

நீர்வேலி,ஒக்.14

நீர்வேலி கருணாலய சிறுவர் இல்லத்தில் சர்வதேச சிறுவர் தினமும் நவராத்திரி வழிபாடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டன.

இந்தநிகழ்வில்மேற்படிசிறுவர் பராமரிப்பு இல்ல சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (203-224)

## நடமாடும் பதிவு சேவை

கோப்பாய்,ஒக்.14

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் காலங்கடந்த பிறப்பு - இறப்புப் பதிவுகள் தொடர்பான நடமாடும் செயலக சேவை எதிர்வரும் 17ஆம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (202-72)

## நீர்வேலி ப.நோ.கூ.சங்கத்தில் நலிவுற்றோருக்கு நிவாரணம்

நீர்வேலி,ஒக்.14

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நலிவுற்றோருக்கான நிவாரணப் பொருள்களை விநியோகித்து வருகின்றது.

வெள்ளைப்பச்சைஅரிசி, சீனி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றன நிவாரணத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன. (203-224)

## வெற்றிலைக் கேணியில் அறுவரை மீட்டதாக படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு,ஒக்.14

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணிக் கடற்கரையோரத்தில் வழிதவறிவந்த இடம்பெயர்ந்தவர்கள் சிலரை படையினர் மீட்டுள்ளனர்.

படகொன்றில் பயணித்துக் கொண்டிருந்த இவர்களை நேற்று முன்தினம் பிற்பகல் மீட்கப்பட்டனர் கடற்படைப் பேச்சாளர் வி.கே.பி.தசாநாயக்க தெரிவித்தார்.

வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவரையே கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இவர்களை திருகோணமலை கடற்படைமுகாமில் ஒப்படைத்ததாக கடற்படைப் பேச்சாளர் கூறினார். (1)

## படை நடவடிக்கையால் வன்னிப் பகுதியில் 26 ஆயிரம் மாணவர்களின் கல்வி பாதிப்பு

கொழும்பு, ஒக்.14

படைநடவடிக்கை காரணமாக வன்னிப் பிரதேசத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 26 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தெரிவித்திருக்கின்றார்.

இந்த மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு நூற்றுக்கும் மேற்பட்ட தற்காலிகக் கொட்டில்களை அமைக்க வேண்டியிருக்கிறது எனவும் அவற்றில் 40 கொட்டில்களை மிகவும் அவசரமாக, உடனடியாக நிர்மாணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது எனவும் அவர் கூறியிருக்கின்றார். இதற்குரிய உதவிகளைப் பெற்றுத் தருமாறு கிளிநொச்சி அரசு அதி பரிடம் அவர் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், தேவைகள் குறித்து கிளிநொச்சி அரச அதிபர் என்.வேதநாயகனிடம் கேட்டபோது இந்தத் தேவைகளை கொழும்பில் உள்ள சி.எச்.ஏ. எனப்படும் மனிதாபிமான சேவைகளுக்கான நிலையத்தின் ஊடாகப் பூர்த்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (சி)

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
04.07.1924

இறப்பு
23.09.1991

திதி:14.10.2008



அமரர் S.R.**பொன்னம்பலம்**
(ஓய்வுபெற்ற அதிபர், கோவிலாக்கண்டி)

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு.

மீசாலை.

மனைவி.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 * 09 * 1939



உதிர்வு 10 * 10 * 2003

அமரர் **வேலுப்பிள்ளை வாமதேவன்**
[ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்]
திதி:பூரணை (14.10.2008) செவ்வாய்க்கிழமை

ஆண்டுகள் ஐந்து ஆனாலும் ஆறாது உங்கள் பிரிவுத்துயர் அப்பா!
நாங்கள் பூமியில் வாழும் காலம்வரை எமை விட்டகலாது எமது இதயச்சுமை அப்பா!
இறைவனிடம் தினம் வேண்டி நிற்கின்றோம் - அப்பா
மீண்டும் எம்முடன் பிறந்து வர வேண்டும் - என்று....

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை. [79200]

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



**செல்வி பாலசுப்பிரமணியம் அர்ச்சனா**

மலர்வு 10.04.1986 உதிர்வு 17.10.2005

திதி:பௌர்ணமி (14.10.2008)

வான் கதவைத் திறந்துவந்து வண்ணமுகம் காட்டாயோ!
தாமரையாய் பூத்து வந்த தங்கமுகம் மறைந்ததுவோ!
தேமதுரத் தமிழ் பேசும் தேன் மொழிவாய் மூடியதோ!
பூமுகத்தைக் காணாது பொழுதெல்லாம் தேடுகிறோம்
வான் கதவைத் திறந்து வந்து வண்ணமுகம் காட்டாயோ?

விளையாட்டரங்கு வீதி,
க...ப்பிராய். [79209]

உன் நினைவில்:
உன் உறவுகள்.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் லான்ட் ஓ லேக்ஸ் பாற்பொருள் அபிவிருத்தி லங்கா நிறுவனமும் இணைந்து நடத்தும்

யாழ்கோவின் பாற்பொருள் தயாரிப்புகளின் மீள் அறிமுக நிகழ்வு

கூட்டுறவே நாட்டுயர்வு
நேரம் மு.ப. 10 மணி முதல் பி.ப.4 மணிவரை

எமது பொருளாதாரம் எமது கையில்


திகதி — நடைபெறும் இடங்கள்
15.10.2008 — அச்சுவேலி பேருந்து நிலைய வளாகம், நீர்வேலி புன்னாலைக் கட்டுவன் வீதி, கோப்பாய் கந்தசாமி கோயிலடி
17.10.2008 — வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு.


வாருங்கள்! வாங்குங்கள்! பயன்பெறுங்கள்!

யாழ்கோவின் பாற்பொருள்களை சுவையுங்கள்!
பரிசுகளை வெல்லுங்கள்!!!

தரமான ஊட்டம் நிறைந்த உள்ளூர் பால் உற்பத்திகளை வாங்கி அருந்தி ஆரோக்கியமாக வாழ்வோம்!
மாவட்டக் கால்நடைப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா நேற்றுத் திங் கட்கிழமை இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வல்லிபுர ஆழ்வார் தேருக்கு எழுந்தருளுவதையும் தேரில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

அடியார்கள் பிரதிஷ்டை செய்தும் தூக்குக் காவடி எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களைத் தீர்ப்பதை அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

### வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழாவிற்கு

# குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடினர்

கரவெட்டி,ஒக்.14

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் தேர்த் திருவிழாற்கு பல்லாயிரக் கணக்காண பக்தர்கள் குடாநாட்டின் பல பிரதேசங் களிலிருந்தும் வந்திருந்தனர். வலிகாமம் பகுதி மக்கள் மாட்டு வண்டில்களில் ஆல யத்திற்கு வருகை தந்திருந்தமை இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டியதாகும்.

அதிக எண்ணிக்கையில் படையினர் ஆலய வீதிக ளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டி ருந்தனர். காலை 9.40 மணிக்கு வல்லிபுர ஆழ்வார் இருப்பிடத்தில் இருந்து எழுந்தருளி தேரடிக்குச் சென்றார். இலட்சுமி, பிள்ளையார், ஆஞ்சநேயர்ஆகியோரும் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார் களுக்கு அருள் பாலித்தனர். தேர் இருப் பிடத்திற்கு முற்பகல் 10.35 மணி யளவில் வந்து சேர்ந்தது. பெரும் எண்ணிக் கையான அடியார்கள் அங்கப் பிரதிஷ்டை செய்தும் காவடி எடுத்தும் அடி அழித்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய் தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆலய வீதிகளிலும் ஏனைய இடங்களி லும் பக்தர்களின் நலனைக் கருத்திற் கொண்டுள்ள தாகசாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அடியார்களின்போக்கு வரத்துக்கென தனியார் போக்குவரத்துச் சேவையினரும் இ.போ.ச சேவையினரும் விசேட பஸ் சேவைகளை நடத்தினர்.

வல்லிபுரத்தானின் சமுத்திரத் தீர்த்தத் திரு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாளை புதன் கிழமை கேணித் தீர்த்தமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும்.

(203-70)

# வடக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளின் சேவை விவரங்களை தொகுக்குமாறு அறிவுறுத்து

## மாகாண ஆணையாளர் விடுத்துள்ளார்

மானிப்பாய்,ஒக்.14

வடக்கு மாகாணத்தில் உள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என்பன தங்கள் சபைகளினால் வழங்கப் படுகின்ற சேவை விவரங்களை ஒழுங்கு படுத்தி வன்,மென் பிரதிகளில் தொகுத்து அனுப்பி வைக்க வேண்டும்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் எவ்.ஜோன்சன் வட மாகாணத்தில் உள்ள சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் மூலவளத்திரட்டு எனும் தலைப்பில் எழுதிய கடிதத்தில் இவ்வாறு கோரியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப் பவை வருமாறு:-

மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை களின் வளங்களின் மூலவளத் திரட்டு தயாரிக்க வேண்டியுள்ளது.

தரவுகளின் அடிப்படையில் கிடைக் கும் மூலவளங்கள் எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது,எதிர்காலத்தில் பயன்படுத்தக் கூடியவை எவை என இனங்காணப்பட்டு அவற்றை ஒப்பிட்டு எழுத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். உள்ளூராட்சிச் சபைகளின் வரலாற்றுப் பின்னணி மற்றும் அவற்றின் தூரநோக்கு, நோக்கங்கள், வெளிப்பாடுகள், அமைவிடம், யுத்த சூழ்நிலையால் அவற்றுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் என்பன குறிப்பிடப்பட வேண்டும்.


இத் தரவுகளினைப் பெற சபைகளின் வருமான மதிப்பீட்டாளர்கள், வருமான அதிகாரிகளது முழுநேர சேவை பெறப் படல் வேண்டும்.

இதேபோல்-

உள்ளூராட்சிச் சபைகளினால் சேவை வழங்கப்படுகின்ற விதம், அதன் நிறுவனக் கட்டமைப்பு, நிர்வாகக் கட்டமைப்பு, அதிலுள்ள நிறைவேற்று மற்றும் பதவி நிலை அலுவலர்கள் தொடர்பான விவரங் களும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட் டங்களின் உள்ளூராட்சி உதவி ஆணையா ளர்களுக்கும், வடக்கு மாகாண உள்ளூ ராட்சி அமைச்சின் செயலாளருக்கும் பிரதிகள் கடிதத்தில் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

(203-95)




# அபிவிருத்திப் பணிகளுக்கு 55 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக்.14

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் அபி விருத்திப் பணிகளை மேற்கொள்ளவென 'கமநெகும' திட்டத்தின் கீழ் 55 லட்சத்து 45 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

பாடசாலைக்கட்டடங்களின் புனரமைப்பு, தளபாடக் கொள்வனவு மற்றும் சனசமூக நிலையங்கள், கிராமம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு இந்த நிதி பயன்படுத்தப் படவுள்ளதாகக் கூறப்பட்டது. (203-111)

# முன்பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டி கௌரவிப்பது தற்போதைய சூழ்நிலையில் அவசியமானதாகும்

## கூட்டுறவு சமாசத் தலைவர் கருத்து



யாழ்ப்பாணம்,ஒக்.14

சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத் துக் கொடுக்கும் முன் பள்ளிகளின் ஆசிரியர் களைப் பாராட்டி கௌர விப்பது தற்போதைய சூழ்நிலையின் அவசியமாகும்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும் யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவரு மான ப.கிரிதரன்.

யாழ்.வர்த்தக தொழில்துறை வேளாண் மகளிர் ஒன்றியத்தினால் முன்பள்ளி ஆசிரி யர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில்இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் கூறியவை வருமாறு :-

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையால் சிறுவர்களின் கல்வி வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

வேதனத்தை எதிர்பார்க்காது சிறுவர்க ளின் கல்வி வளர்ச்சிக்காகச் சேவையாற்றி வரும் ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியர்களதும் கொடுப்பனவும் அதிகரிக்கப்பட வேண்டும்.

முன்பள்ளிகளைச் செயற்படுத்திவரும் நிறுவனங்களையும் நாம் இந்தச் சந்தர்ப் பத்தில் பாராட்ட வேண்டும்.

எமது மண்ணின் சிறுவர்களின் கல்வி வளர்ச்சியின் ஆரம்ப அத்திபாரம் முன்பள் ளிகளின் ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது

மனித குலத்திற்குச் சேவை செய்வது என்பது ஒரு தெய்வீகப் பணியாகும்.

அந்த வகையில் முன்பள்ளி ஆசிரியர் ஒவ் வொருவரினதும் கல்விச்சேவை மேன் மையானது

இந்த மண்ணில் எத்தனையோ சிறுவர் கள் கல்வி மற்றும் அத்தியாவசிய சேவை இன்றி அவதிப்படுகின்றனர்.

முன்பள்ளிகளில் சிறுவர்களுக்கான கல்வி வசதி மற்றும் இலவச சத்துணவு வழங் குதல் போன்றவை சிறந்த முறையில் இடம்பெற்று வருகின்றன.

இதனால் நலிவுற்ற,பாதிக்கப்பட்ட குடும் பங்களைச் சேர்ந்தசிறுவர்கள்பெரிதும் நன்மை யடைவார்கள்-என்றார்.

(203-224)

# சீமெந்துத் தட்டுப்பாடு; தொழிலாளர் பாதிப்பு

நவாலி,ஒக்.14

குடாநாட்டில் சிமெந்திற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கட்டடத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ளனர்.

சிமெந்து இன்மையால் தொழில் வாய்ப்பை இழந்துள்ள தொழிலாளர் என்ன செய்வதெனத் தெரியாத நிலை யில் உள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

2 ஆயிரத்து 400 ரூபாவிற்கு தனியா ரால் விற்பனை செய்யப்பட்டு வந்த சிமெந் தும் தற்போது இல்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

(203-100)



சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயத்தின் சிறுவர்தின நிகழ்வின் போது ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தினரின் பால் வழங்கும் வைப வத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் மாணவர்களுக்குப் பால் வழங்குவதைக் காணலாம்.

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விபரம்

அண்மையில் நடைபெற்ற தரம் 5 புல மைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேலும் சில மாணவர்களின் விவரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

**உடுவில் அ.மி.த.க.பாடசாலை**

ஜெ.ஜானுயா(128), சு.றுபேஸ் கீர்த்த னன்(127), ர.வித்யன்(127),

**ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி.**

இ.தினேஸ்(125), ப.சஞ்சீபன்(118), மு.சஜிபா(118).

(202-86)

# நெடுந்தீவுக் கோட்டத்தில் கல்வித்தினம் அனுஷ்டிப்பு

நல்லூர்,ஒக்.14

நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகளில் நாளை மறுதினம் வியாழக்கிழமை கல்வித் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கல்வித் தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் மாணவர்களிடையே பேச்சு, விவாதப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில் கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளில் தீவக வலயக் கல்வி அதிகாரிகள் மற்றும் பெற்றோர் களும் கலந்து கொள்வர்.

(203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வதில் ஆசிரியர்கள் எப்போதும் பின்நிற்கக் கூடாது

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்க வேண்டுமென்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடங்கிடையாது.

## சமூக அசைவியக்கத்தின் ஜீவ நாடியாக ஆசிரியத்துவம் பெருமை பெறுகின்றது

ஆசிரியர்களைப் பின்பற்றுவதிலும் அவர்களைப் போலச் செய்வதிலும் மாணவர்கள் மிக்க ஆர்வம் காட்டுவார்கள்.


சமூக அசைவியக்கத்தின் ஜீவநாடியாகக் கொள்ளப்படும் அளவுக்கு ஆசிரியத்துவம் பெருமை பெற்று விளங்குகின்றது. அதன் பெருமையையும் புகழையும் தக்க வைக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இன்றைய கல்விப்புலம் சார்ந்தவர்களுக்கு உரித்துடையதாகும்.

பாடசாலைகளில் நடைபெறும் பொது நிகழ்வுகளின்போது ஆரம்ப நிகழ்வுகளாக இறைவணக்கம், அமைதி வணக்கம், தமிழ்த்தெய்வ வணக்கம் போன்ற சம்பிரதாய பூர்வ நிகழ்வுகள் இடம்பெறுவது வழமையானது. இவ்வேளைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் எத்தகைய நிலைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இறைவணக்க நிகழ்வின் போது அதிபர், ஆசிரியர் எனப்பலரும் வெவ்வேறு கோலங்களில் - மாணவர்களுக்கான இறைவணக்கத்தில் எமக்கென்ன வணக்கம்? என்ற மனோ நிலையில் - விளங்கும் தன்மையைப் பல இடங்களில் அவதானிக்க முடிகிறது.

மாணவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என எதிர்பார்க்கப்படும் யாவரும் இறை வழிபாட்டின்பால் கவனமெடுத்து தாழும் வணக்கம் செலுத்தும் நிலையில் கைகூப்பித் தொழும் கோலத்தில் காட்சிதர வேண்டியது அவசியமானது.



இதைவிடுத்து, இறைவணக்கம் இடம் பெறும்போது பின்னால் கைகட்டுவோர் ஒருவகை, முன்னால் கை பிணைப்போர் ஒருவகை, தொடைகளில் கையணைப்போர் ஒருவகை எனப் பல்வேறு காட்சிகளைத் தரிசிக்கும் நிலை அரங்கேறுகிறது. அரிதினும் அரிதாகவே பெரியோர்கள் கைகூப்பித் தொழும் காட்சியைக் காண்கிறோம்.



அமைதிவணக்க நிகழ்வில் பங்கெடுப்போரும் பல்வேறு மெய்ப்பாட்டுக் கோலங்களையே வெளிப்படுத்துகின்றனர். நிகழ்வில் ஒரு பொதுத் தன்மை அதாவது ஒருமைப்பாடு இருத்தல் நிகழ்வினை மெய்யுணர்வுள்ளதாக்கும்.

அமைதி வணக்க நிகழ்வின் போது கவனமாய் நில் (*Attention*) என்ற கட்டளைக்குரிய நிலையைப் பேணுவதே சாலச் சிறந்தது. வணக்க நிகழ்வாகையால் கைகூப்ப வேண்டும் என வாதிப்போரும் உள்ளனர். பாடசாலைக் கீதம் முதலான கௌரவிப்புப் பாடல்கள் இசைக்கப்படும் போதும் கவனமாய் நில் என்ற நிலையையே கைக்கொள்ள வேண்டும்.

ச.லலீசன்
அதிபர், கோப்பாய் றோ.க.த.க.

இவை எல்லாவற்றிற்கும் உதாரண புருஷர்களே முன்மாதிரியாகத் திகழ வேண்டும். சமூக மாற்றத்திற்கு இதுவே அடித்தளமாக அமையும். பாடசாலைகளில் இப்பண்புகள் சீர் செய்யப்படும் போதே சாதாரண மக்களின் பொது நிகழ்வுகளில் இவற்றின் சீர்த்தன்மையை எதிர்பார்க்க முடியும்.

உள்ளார்ந்த உணர்வு நிலையில் ''நமது மொழி, நமது பண்பாடு'' என விசை பெறச் செய்தலின் மூலமே இவற்றைச் சாத்திய மாக்கலாம். *




# மாணவர்களின் இடைவிலகலைத் தவிர்ப்பதற்கு பாடசாலையில் கட்டாயக் கல்விக்குழு அவசியம்

எமது நாட்டின் இளம்சமுதாயம் வினைத்திறன் மிக்கதாக உருவாகுவதற்கு கல்வியறிவு இன்றியமையாததென்ற அடிப்படையில் கட்டாயக் கல்வி ஒவ்வொரு பிள்ளையும் பதினான்கு வயதுவரை பெற வேண்டும் என்று சட்டத்தின் மூலம் இறுக்கமாக்கப்பட்டுள்ளது. இவ் வயதெல்லையை பதினாறாக அதிகரிக்க வேண்டும் என்ற திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது. இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் ஐந்து வயதிலிருந்து பதினான்கு வயது வரை கட்டாயமாகப் பாடசாலைக்குச் சென்று கற்கவேண்டும். இக்காலப் பகுதியில் பிள்ளை பாடசாலைக்குச் செல்லாதிருந்தால் அதற்குக் காரணமானவர் சட்டத்தின் முன் தண்டனை பெற வேண்டியவராவார்.

## ஒவ்வொரு பிரஜையும் 5 வயது முதல் 14 வயது வரை கட்டாயமாகப் பாடசாலை செல்ல வேண்டும்

மாணவரின் இடைவிலகலைத் தவிர்ப்பதற்காகவும் கல்வியின் பால் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் காலத்திற்குக் காலம் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் பலவிதமான அனுசரணைகளை வழங்கி வருகின்றன. இலவசக் கல்வி முறையின் மூலம் பாடசாலைகளுக்குச் சகல பௌதீக வளங்களையும் வழங்கிய அரசாங்கம் ஆளணி வசதிகளையும் ஏற்படுத்தியது. இலவசப் பாடப் புத்தகங்கள், இலவச சீருடைகள் என ஆண்டு தோறும் கல்விக்காக அரசாங்கம் செலவிடும் நிதி பெருமளவில் அதிகரித்துச் செல்கின்றது. நாட்டில் அதிக ஆளணியினரைக் கொண்ட துறையாக கல்வி அமைச்சு காணப்படுகின்றது.

இலங்கை மாணவர்களுக்கு அரசாங்கம் செய்யும் செலவுகள் ஒரு மூலதனச் செலவாக, கல்வியறிவுள்ள சமுதாயத்தை உருவாக்க மேற்கொள்ளப்படும் செலவாக, நீண்டகால அடிப்படையில் இச் செலவின் பயனை மீள அனுபவிக்க முடியும் என்றவாறாகக் கருதப்படுகின்றது. உலகில் கல்வியறிவுள்ளவர்கள் அதிகளவு வீதம் வாழும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. எனினும் வெளிநாடுகளின் அபிவிருத்திப் போக்குகளில் காணப்படும் வளர்ச்சிக்கு இலங்கை ஈடுகொடுக்க முடியாதுள்ளதால் எதிர்காலத்தில் இந்த வீதம் குறைவடையலாம் என்ற பயம் கல்வியாளர்களிடையே உள்ளதை நாம் அறியலாம். இதற்கு எமது நாட்டின் யுத்தச் சூழல்களும், பொருளாதார நிலைகளும் காரணமாக அமைய முடியும்.

இந்நிலையில் கட்டாயக் கல்வியை அமுல் செய்யும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை அரசாங்கமும் கல்வியமைச்சும் முன்னெடுக்கின்றன. பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வியை வழங்குவதுடன் பாடப் புத்தகங்கள், சீருடைகள் என்பனவும் பாடசாலைகளில் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. பல்வேறு புலமைப்பரிசில்களை அறிமுகம் செய்து உதவித் தொகைகளையும் அரசாங்கம் வழங்குகின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும், பின் தங்கிய பகுதிகளிலும் மாணவர்களுக்கு உலக உணவுத் திட்ட நடைமுறையின் கீழ் இலவச உணவு வழங்கலும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

இவ்வாறான நிலைகளிலும் பாடசாலைக் கல்வியை முழுமையாக நிறைவு செய்து கல்வி கற்பதில் 'தப்பிப் பிழைப்போர்' எவ்வளவு பேர் எனக் கணிப்பீடு செய்வோமாயின் செலவிடப்படும் நிதியில் அரைப்பங்குக்கு மேல் விரயமாம்வதாகவே கருதமுடியும். இதனால் பாடசாலை மட்டத்தில் கட்டாயக் கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டு பாடசாலை செல்லவேண்டிய வயதில் அங்கு செல்லாதவர்களைக் கண்டறிந்து அவர்களைக் கல்வி கற்க வைப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபடத்தூண்டும் முயற்சி நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

பாடசாலை அதிபர், கிராம சேவையாளர், மதகுருமார், பெற்றோர், ஆசிரியர் எனப் பலதரப்பட்டவர்களைக் கொண்டு கட்டாயக் கல்விக்குழு ஒவ்வொரு பாடசாலையிலும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மாதமொரு முறை கூடி மாணவரின் வரவொழுங்கின்மை, வரவின்மை குறித்து ஆய்வு செய்து குறித்த பிள்ளையையும் பெற்றோரையும் அணுகி கல்வி கற்க வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்திப் பாடசாலைக்குக் கொண்டு வரும் பணியை மேற்கொள்ளும்.

சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற சிறுவர்களின் அபிவிருத்திக்கான, சட்ட ஆக்கங்களின் மூலம் அவர்களின் கல்வி கற்கும் உரிமை பேணப்படுகின்றது. கற்கும் உரிமையைத் தடுத்தல், பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல் வேலைக்கமர்த்துதல் போன்றவை சட்டப்படி குற்றமாகும். அத்துடன் பாடசாலைகள் பிள்ளைகள் மகிழ்ச்சிகரமான சூழலில் கற்றலை மேற்கொள்வதையும், பிள்ளைநேயத்துடன் இயங்குவதையும் உறுதிப்படுத்துவதற்காகவும் தண்டனை வழங்கலைத் தவிர்த்தல், மாணவர்களுக்கு ஊக்குவிப்புகளைக் கொடுத்தல் என்பவற்றிக்காகவும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல செயலமர்வுகளைக் கல்வித் திணைக்களம் முன்னெடுக்கின்றது.

பாடசாலை கட்டாயக் கல்வியை ஊக்குவிக்கும் திட்டத்துடன் செயற்பட்டாலும் பின் தங்கிய கிராமங்களில் பெற்றோர் சரியான புரிந்துணர்வின்மையால் வீட்டு வேலைகளுக்காகவும் குழந்தைகளைப் பராமரிப்பதற்காகவும் பெண் பிள்ளைகளை பாடசாலைக்கனுப்பாது விடுதல், ஆண் பிள்ளைகளை தொழில்களுக்கனுப்புதல் போன்றவற்றால் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இடைவிலகும் நிலை காணப்படுகின்றது. இதனை நீக்கி நிறைவான கல்விச் சமூகமொன்றை உருவாக்குவதில் பாடசாலைகளுடன் பெற்றோரும் ஏனைய சகலரும் ஒன்றுபட்டுச் செயற்படுதல் மிக இன்றியமையாததாகும். *

வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்
சண்டிப்பாய் இந்துக் கல்லூரி



சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச சிறுவர்தின விழாவில் விருந்தினர்களாக கலந்துகொண்ட சிறுவர்களின் வாத்திய இசையுடன் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகளால் பாடசாலைக்கு அழைத்து வரப் படுகின்றனர்.

# போதைத் தடுப்பு சுவரொட்டிப் போட்டியில் பருத்தித்துறை மாணவி 2 ஆம் இடத்தில்



கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட போதைப் பொருள் தடுப்பு தொடர்பான சுவரொட்டிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவி செல்வி எஸ்.துர்க்கா (ஆண்டு 11) இரண்டாம் இடத்தைப் பெற்று கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடமிருந்து பரிசிலைப் பெற்றுள்ளார். இசுறு பாய கல்வியமைச்சில் நடைபெற்ற விழா விலேயே இம்மாணவி பரிசில் வழங்கிப் பாராட்டப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி நெருக்கடியை ஒருங்கிணைந்து சமாளிக்க வளர்ச்சி அடைந்த நாடுகள் வாஷிங்டனில் முடிவு

வாஷிங்ரன், ஒக்.14

சர்வதேச நிதிநெருக்கடியை ஒருங்கிணைந்து சமாளிக்க வளர்ச்சியடைந்த நாடுகள் வாஷிங்டனில் நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் முடிவு செய்துள்ளன. நிதி ஒதுக்கீடு மட்டுமின்றி பொருளாதார ரீதியிலும் தேவையான நடவடிக்கைகளை கூட்டாக மேற்கொள்ளவும் இதில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வாஷிங்ரனில் நடைபெற்ற இந்த அவசரக் கூட்டத்துக்கு ஜி-20 நாடுகளின் கூட்டமைப்பும், ஐ.எம்.எவ் அமைப்பும் ஏற்பாடு செய்திருந்தன. நிதி மற்றும் பங்குச் சந்தையில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைளையும் - காலதாமதமின்றி மேற்கொள்வதற்கும் இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டத்தில் ஜி-20 நாடுகளின் நிதி அமைச்சர்களும் அந்நாடுகளின் மத்திய வங்கிகளின் தலைவர்களும் பங்கேற்றனர். இக்கூட்டத்துக்கு பிரேஸில் நிதி அமைச்சர் குயுடோ மான்டோகோ தலைமை வகித்தார்.

''இந்த நெருக்கடியிலிருந்து மீள அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியம்'' என அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தமதுரையில் வலியுறுத்தினார். நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கும் சந்தையை நிர்வகிப்பதற்குத் தேவையான வழிகாட்டுதலை வழங்குவதற்கும் இதில் உடன்பாடு எட்டப்பட்டது. தேவைப்படும் நாடுகளில் சிறு வணிகக் கடன், நிதி ஆதாரம் ஆகியவற்றை வலுப்படுத்துவதென்றும் முதலீட்டாளர்களின் நலனைக் காப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

• நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்தொடர்பான வழிகாட்டுதலை அனைத்து நாடுகளுக்கும் அனுப்பும் 'பொறுப்பும் ஐ.எம்.எவ்- விடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது எடுக்கப்பட்ட முடிவுகளின் பலன்கள் குறித்து பிரேஸிலில் நவம்பர் மாதம் கூடி ஆராய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.



வாஷிங்டனில் நடைபெற்ற ஜி 20 நாடுகள், ஐ.எம்.எஃப் ஆகியவற்றின் அவசரக் கூட்டத்தில் கலந்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் (இடமிருந்து) அமெரிக்க நிதித்துறைச் செயலர் கென்றி போல்சன் பிரேசின் நிதி அமைச்சர் குயுடோ மென்டேகா.

''தற்போதைய நெருக்கடி ஒரு சீரான தன்மையுடன் காணப்படுகிறது. எனவே இதைச் சரிப்படுத்த சீரான நடவடிக்கைகளும் அவசியமாகின்றன'' என ஐ.எம்.எவ். நிர்வாக இயக்குனர் டோமினிக் ஸ்டிராஸ் கான் தெரிவித்துக் கொண்டார். எனவே, நிதி நிலையையும் பங்குச் சந்தை நிலையையும் கண்காணித்து உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் அவர் வலியுத்தினார்.

தற்போதைய நெருக்கடியைத் தீர்க்க அசாதாரணமான நடவடிக்கை தேவை. இது நன்கு உணரப்பட்டுள்ளது. இதற்கு தேவையான அனைத்து நிதியையும் அந்தந்த அரசுகள் அளிக்க வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்பு பலஇலட்சம்கோடி டொலர்களைத்தாண்டும். இது மிகச் சாதாரணமானதல்ல. இதை உணர்ந்து அனைவரும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஐ.எம்.எவ் தலைவர் புத்ரோஸ் காலி இதில் கேட்டுக் கொண்டார்.

# பெரு நாட்டின் புதிய பிரதமர்

லிமா, ஒக். 14

பெருநாட்டின்புதிய பிரதமராக யெஹூத் சைமன் (வயது - 61) நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி அலன் கார்சியா இதைத் தலைநகர் லிமாவில் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். இடதுசாரி சிந்தனையுள்ள யெஹூத் சைமன் சிறந்த நிர்வாகி, நேர்மையாளர் எனப் பெரிதும் பாராட்டப்பட்டவர்.

பெரு நாட்டின் எண்ணெய் வயல்களைத் தனியாருக்குக் குத்தகை விடுவது தொடர்பாக அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் நடந்த ஊழல்பேரம் இரகசியமாக யாரோ ஒருவரால் வீடியோவில் படம் பிடிக்கப்பட்டது.

அந்த உரையாடலில் பிரதமர் ஜோர்ஜ் டெல்கொஸ்டிலோவின் பெயரும் அடிபட்டது. பின்னர் அந்தக் காட்சிகள் கடந்த வாரம் திடீரெனத் தொலைக்காட்சி அலைகளில் ஒளிபரப்பப்பட்டன. அந்தப் பேரத்தில் முன்னாள் அமைச்சர், அதிகாரி ஒருவர் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தனர்.

பிரதமராக இருந்த ஜோர்ஜ் டெல் கொஸ்டிலோ அதில் நேரடியாகச்சம்பந்தப்பட்டாரா? இல்லையா? என்பது இன்னும் உத்தரவாதப்படுத்தப்படவில்லை. எனினும் அந்தப் பேரம் மிகவும் முக்கியமானது, உண்மையானது என்று பூர்வாங்கவிசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. எனவே பிரதமரைப் பதவி நீக்கம் செய்வதைத்தவிர ஜனாதிபதிக்கு வேறு வழி இருக்கவில்லை. அமைச்சரவை முழுமையாக இராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரியமையால் ஜனாதிபதியும் அவ்வாறே உத்தரவிட்டார். அதற்கிணங்க எல்லா அமைச்சர்களும் இராஜிநாமா செய்துவிட்டனர்.

புதிய பிரதமராக இடதுசாரி சிந்தனையாளரான யெஹூத் சைமன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். பதவியேற்பு வைபவம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

# வட ஈராக்கில் கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க பிரதமர் உறுதி

பக்தாத், ஒக்.14

வட ஈராக்கிய நகரான மொசூலிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் என ஈராக்கிய பிரதமர் நூரி மாலிகி உறுதி அளித்துள்ளார். அதேவேளை கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தடுக்கும் பொருட்டு, மொசூலில் 1,000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மொசூலில் கடந்த ஒருவார காலமாக, கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் [illegible]ம்பெற்று வருகின்றன. இதுவரை நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ குடும்பங்கள் நகரை விட்டு வெளியேறியுள்ளதாக, மொசூல் மாநில ஆளுநர் முஹம்மது கஷ்மூலா தெரிவித்துள்ளார்.

நகரிலிருந்து வன்செயல்களுக்கு அஞ்சி வெளியேறியுள்ள கிறிஸ்தவர்கள், கிராமப்புறங்களில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அவர்களின் பாதுகாப்பிலும் அக்கறை செலுத்தப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒருவார காலத்துக்குள் 12 கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பெருந்தொகையான கிறிஸ்தவர்கள் தாக்குதல்களால் படுகாயங்களுக் குள்ளாகியுள்ளார்கள். சுனி முஸ்லிம் தீவிரவாதிகளே இந்த மதவாத வன்செயல்களைக் கட்டவிழ்த்துள் ளார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்துள்ளது.

மொசூலில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்டுள்ள வன்முறைகளுக்கு, வத்திகானில் பதினாறாவது ஆசீர்வாதப்பர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இரத்தக் களரிகள் உடனடியாகத் தடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

''இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நாம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வோம். மொசூலிலுள்ள கிறிஸ்தவர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களுக்கு உடனடி பரிகாரம் காணப்படும்'' என பிரதமர் தமது அறிக்கையில் உறுதியளித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு, ஈராக்கிலிருந்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 800,000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் அமெரிக்காவின் படையெடுப்புக்குப் பின்னர், பெருவாரியானோர் வெளியேறிவிட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

''2003 ஆம் வருட யுத்தத்துக்கு முன்னர், மொசூலில் மாத்திரம் 20 ஆயிரம் கிறிஸ்தவர்கள் வரை இருந்தார்கள். தற்போது அவர்களில் பாதிப்பேர் கூட மொசூலில் இல்லை'' என மொசூல் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோசப் ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

''இஸ்லாமிய தீவிரவாதிகள் நூர் பகுதியிலுள்ள என் வீட்டுக்கு வந்து, வீட்டைக் காலி செய்து விட்டு, ஊரை விட்டு ஓடிவிடு எனதுப்பாக்கி முனையில் என்னை மிரட்டினார்கள். இது போன்ற குற்றச்செயல்களை நோக்கும் போது, அரசு என்று ஒன்று உள்ளதா? இராணுவம் என்று ஒன்று உள்ளதா? எனக் கேட்கத் தோன்றுகிறது'' என பஷீர் அசோஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு கருதி, ஊரைவிட்டு குடும்ப சகிதம் வெளியேறியுள்ள இவர், 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள குவார் கோஷ் நகரில், தனது மனைவி, குழந்தைகள் ஆகியோருடன் தங்கியுள்ளார். இது கிறிஸ்தவர்களை பெருந்தொகையினராகக்கொண்ட ஒருபிராந்தியமாகும்.

மொசூல் நகரில் கிறிஸ்தவர்கள் காலிசெய்த வீடுகளை தீவிரவாதிகள் குண்டுவைத்துத் தகர்த்துள்ளார்கள் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். தற்போது அனைத்துப் பகுதிகளிலும் பொலிஸ்பாதுகாப்புபலப்படுத்தப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

# பிரிட்டனிலும் பெரும் நிதி நெருக்கடி

லண்டன், ஒக்.14

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஆதிக்கம் செலுத்தும் நிதிநெருக்கடி பிரிட்டனையும் உலுக்கத் தொடங்கியுள்ளது. இறந்தவர்களை அடக்கம் செய்யும் விடயத்தில் நெருக்கடிகளும் கெடுபிடிகளும் பெரும் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளன.

பிரிட்டனில் வாழும் ஏழைகள், ஓய்வூதியர்கள், அரசுதரும் உதவிப்பணத்தில் வாழ்க்கை நடத்துவோர் ஆகியோர் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். தம் வீட்டில் ஒருவர் இறந்துவிட்டால், இறுதிச்சடங்குகளைஎப்படி? எப்போது? நடத்துவது என்பதை தீர்மானிக்க முடியாமல் தத்தளிக்கிறார்கள்.

முன்னர் ஒருவர் இறந்துவிட்டால் நீத்தார் சடங்குகளைச் செய்வதெற்கென்றே இயங்கும் தனியார் நிறுவனங்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுப்பர். குறிப்பிட்ட நிறுவனத்தினர் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வர். பின்னர் நிதானமாகப் பணம் வாங்கிக் கொள்வர். இதுதான் நடைமுறை.

இப்போது இந்நடைமுறை முற்றாக மாறிவிட்டது. செலவுத்தொகையில் பெரும் பகுதியை முற்பணமாக நிறுவனத்தினர் கோருகின்றனர். இல்லையேல் முழுத்தொகையையே கேட்கின்றனர்.

பணம் இல்லை என்றால் ''அரசுக்கு எழுதிப்போடுங்கள். மனுவை அங்கீகரித்து பணமும் அனுப்பும். அது கைக்கு வந்த பின்னர் தகவல் தாருங்கள்'' என்றும் கறாராகக் கூறிவிடுகின்றனர்.

# பராக் ஒபாமாவுக்கு ஆதரவாக 106 வயதுப் பாட்டி பிரசாரம்



ரோம், ஒக்.14

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயக்கட்சி வேட்பாளர் பராக் ஒபாமாவுக்கு ஆதரவாக, 106 வயது மூதாட்டி ஒருவர் பிரசாரம் செய்து வருகிறார்.

சிசிலியா காடேடே என்னும் இந்த மூதாட்டி ஒரு கிறிஸ்தவ கன்னியாஸ்திரி ஆவார். அமெரிக்காவைச் சேர்ந்த இவர், இப்போது இத்தாலியின் ரோம் நகரில் வசித்து வருகிறார்.

அவர் ரோம் நகரிலிருந்தவாறே தபால் மூலம் தனது வாக்கை பதிவு செய்யவுள்ளார். இம் மூதாட்டி தனது விடுதியிலிருந்தவாறே பிரசாரம் செய்து வருகிறார்.

ஒபாமா நல்லவர். திறமையானவர். அவருக்கே அனைவரும் வாக்களிக்க வேண்டும் என இவர் பிரசாரம் செய்து வருகிறார்.

ஒபாமாவை நான் நேரில் சந்தித்ததில்லை. எனினும் பத்திரிகை, தொலைக்காட்சி செய்திகள் மூலமாக அவரின் கருத்துக்களை அறிந்திருக்கிறேன். கருக்கலைப்பு உட்பட பல்வேறு பிரச்சினைகளில் அவரது கொள்கைகளை நான் பெரிதும் ஆதரிக்கிறேன் என்றும் அவர் கூறிவருகிறார்.

# ஈரானின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நிஜாத்தை எதிர்த்து முன்னாள் சபாநாயகர்

தெஹ்ரான், ஒக்.14

''அடுத்த கோடை காலத்தில் நடைபெறவுள்ள ஈரானிய ஜனாதிபதி தேர்தலில், தற்போதைய ஜனாதிபதி அஹ்மதி நிஜாத்தை எதிர்த்து நான் போட்டியிடுவேன்'' என ஈரானிய எதிரணி சிரேஷ்ட பிரமுகர் மெஹ்தி கரூபி அறிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற சபாநாயகர் மெஹ்திகரூபி, அஹ்மதிநிஜாத்தின் வெளிவிவகாரக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றை காரசாரமாகக் கண்டித்துள்ளார். இவர் மறுசீரமைப்பை பெரிதும் ஆதரிப்பவராவார்.

ஈரானின் பொருளாதாரம் சீர்கேடடைந்துவிட்டது. வெளிவிவகாரக் கொள்கையில் ஸ்திரப்பாடில்லை. அது சர்ச்சைக்கும், கண்டனங்களுக்கும் இலக்காகி வருகிறது என்றும் அவர் சாடியுள்ளார்.

# ரஷ்ய விண்கலம் புறப்பட்டது!

விண்வெளி வீரர்கள் சகிதம் ரஷ்ய சோயுஸ் விண்கலம், ஞாயிற்றுக்கிழமை, சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஏவப்பட்டது.

அமெரிக்க விண்வெளி வீரர் மிச்சேல் பின்கே, ரஷ்ய விண்வெளி வீரர் யூரிலோன்சக்கோவ் ஆகியோருடன் அமெரிக்க சுற்றுலாப் பயணியான கேரியாட்டும் இவ் விண்கலத்தில் அனுப்பப்பட்டுள்ளார்.

அமெரிக்க சுற்றுலாப்பயணியான கேரியாட், இப்பயணத்துக்காக, இலங்கை நாணயப்படி, 42 கோடி ரூபா கட்டணம் செலுத்தியுள்ளார்.

கேரியாட்டின் தந்தை ஓவன் கேரியாட்டும் ஒரு விண்வெளி வீரராவார். நாசா ஆய்வு மையத்தில் பணிபுரிந்து வந்த அவர் தற்போது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

ஓவன் கேரியாட், தனது புதல்வர் கேரியாட், ரஷ்ய சோயுஸ் விண்கலத்தில் புறப்படுவதை, பைகானூர் சென்று நேரடியாகப் பார்த்தார். கஜகஸ்தானிலுள்ள பைகானூர் ரொக்கெட் தளத்திலிருந்து, ஞாயிற்றுக்கிழமை, திட்டமிட்டபடி, ரஷ்ய சோயுஸ் ஏவுகணை வெற்றிகரமாக ஏவப்பட்டது.

# ஐக்கிய அரபு எமிரேட்ஸின் நீதிபதியாக பெண்

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் முதல் முறையாக பெண்ணொருவர் நீதிபதியாக நியமிக்கப்படவுள்ளார். இங்கு இதுவரை ஒரு பெண் நீதிபதியாக இருந்ததில்லை. தற்போது குலூத் அகமது ஜவான் அல் தகெரி என்ற பெண், நீதிபதியாக நியமிக்கப்படவுள்ளார். விரைவில் அவர் பதவியேற்கவுள்ளார்.

இது குறித்து, அந்நாட்டின் அதிபர் விவகாரங்களுக்கான அமைச்சர் ஷேக் மன்சூர் கூறுகையில், ''முதல் முறையாக ஐக்கிய அரபு எமிரேட்டில் பெண் ஒருவர் நீதிபதியாக நியமிக்கப்படவுள்ளார். அவருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமைச்சரவை செய்யும். இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு'' என்றார்.

குலூத் அல் தகெரி கூறுகையில், ''நான் நீதிபதியாக பதவியேற்பது, ஐக்கிய அரபு எமிரேட்டில் பெண்கள் பெ[illegible]ம். நாட்டுக்காக சேவை செய்ய முழு முயற்சியையும் மேற்கொள்வேன்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் டெஸ்ட் சமநிலையில்!

## மீண்டும் ஒருமுறை கைநழுவிய சச்சினின் சாதனை முயற்சி!

இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது.

கடந்த 9ஆம் திகதி தொடங்கிய இந்த டெஸ்ட் போட்டியில் தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி 430 ஓட்டங்களைக் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு ஆடிய இந்தியா 360 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

முதல் இன்னிங்ஸில் இந்தியாவை விட 70 ஓட்டங்கள் அதிகமாகப் பெற்றிருந்த அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் நேற்று முன்தினம் ஆட்டத்தின் நான்காம் நாள் நிறைவில் 193 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்தது.

வட்சன் 32 ஓட்டங்களுடனும் ஹடின் 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

போட்டியின் இறுதி நாளான நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் வட்சனின் விக்கெட்டை இழந்தது. 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த வட்சன் ஸ்ர்மாவின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அதனைத் தொடர்ந்து வைற் களமிறங்கினார். ஹடின் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும், வைற் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் பெற்றிருந்த நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 228 ஆக இருந்தபோது ஆஸி. அணி தனது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

அப்போது முதலாவது இன்னிங்ஸில் அதிகமாகப் பெற்றிருந்த 70 ஓட்டங்களுடன் சேர்த்து ஆஸி அணி 298 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது.

தொடர்ந்து தனது இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக கம்பீரும், சேவாக்கும் களமிறங்கினர். சேவாக் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கிளார்க்கின் பந்துவீச்சில் ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய டிராவிட் 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து களமிறங்கிய டெண்டுல்கர் கம்பீருடன் ஜோடி சேர்ந்து ஓரளவு அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். இந்நிலையில் கம்பீர் 29 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.


அவரைத் தொடர்ந்து களமிறங்கிய லக்ஷ்மன் டெண்டுல்கருடன் ஜோடி சேர்ந்தார். அவர் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரைச்சதம் கடக்கும் வாய்ப்பை மயிரிழையில் தவறவிட்டார்.

பின்னர் களமிறங்கிய கங்குலி நிதானமாக துடுப்பெடுத்தாடினார். இவரின் உதவியுடன் லக்ஷ்மன் ஓட்டங்களைக் குவித்தார்.

லக்ஷ்மன் 42 ஓட்டங்களையும், கங்குலி 26 ஓட்டங்களையும் எடுத்திருந்த நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் இப்போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் பிரைன் லாராவின் சாதனையை முறியடிக்க 77 ஓட்டங்களே தேவை என்ற நிலையில் இந்தப் போட்டியில் களமிறங்கிய இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர், இம்முறையும் தனது சாதனையை தவறவிட்டார்.

முதலாவது இன்னிங்ஸில் 13 ஓட்டங்களுடன் வெளியேறிய சச்சின், இரண்டாவது இன்னிங்ஸில் 49 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.



பெங்களூர் டெஸ்ட் கிரிக்கெட்டில் விரேந்தர் சேவாக் ஆட்டமிழந்து செல்வதையும், அவரது ஆட்டமிழப்பை திரையில் ஆர்வத்துடன் பார்வையிடும் ஆஸி. அணி வீரர்களையும் படங்களில் காணலாம்.

### ஓட்ட விவரம்

**ஆஸி. - (முதல் இன்னிங்ஸ்)**

| | | |
|---|---|---|
| ஹைடன் | c டோனி b சகீர்கான் | 0 |
| கடிச் | c டோனி b சர்மா | 66 |
| பொண்டிங் | lbw b ஹர்பஜன் | 123 |
| ஹஸி | b சகீர்கான் | 146 |
| மை.கிளார்க் | lbw b சகீர்கான் | 11 |
| வட்சன் | b சர்மா | 2 |
| கட்டின் | c லக்ஷ்மன் b சர்மா | 33 |
| வைற் | c ஹர்பஜன் b சர்மா | 6 |
| பிரெட் லீ | b சகீர்கான் | 27 |
| ஜோண்சன் | b சகீர்கான் | 1 |
| ஸ்.கிளார்க் | ஆட்டமிழக்கவில்லை | 0 |
| | உதிரிகள் | 15 |
| | மொத்தம் | 430 |

**இந்தியா - பந்துவீச்சு**

| | | |
|---|---|---|
| சகீர்கான் | 29.5 ஓவர்கள் | 5 விக்கெட் |
| இசாந்த் சர்மா | 30 ஓவர்கள் | 4 விக்கெட் |
| ஹர்பஜன் | 41 ஓவர்கள் | 1 விக்கெட் |

**இந்தியா - (முதல் இன்னிங்ஸ்)**

| | | |
|---|---|---|
| கம்பீர் | lbw b லீ | 21 |
| சேவாக் | c ஹைடன் b ஜோண்சன் | 45 |
| டிராவிட் | lbw b வட்சன் | 51 |
| டெண்டுல்கர் | c வைற் b ஜோண்சன் | 13 |
| லக்ஷ்மன் | c கட்டின் b ஜோண்சன் | 0 |
| கங்குலி | lbw b ஜோண்சன் | 47 |
| டோனி | b கிளார்க் | 9 |
| ஹர்பஜன் | c கட்டின் b வட்சன் | 54 |
| சகீர்கான் | ஆட்டமிழக்காமல் | 57 |
| கும்ளே | lbw b வட்சன் | 5 |
| சர்மா | b கிளார்க் | 6 |
| | உதிரிகள் | 52 |
| | மொத்தம் | 360 |

**ஆஸி. - பந்துவீச்சு**

| | | |
|---|---|---|
| ஜோண்சன் | 27 ஓவர்கள் | 4 விக்கெட் |
| வட்சன் | 19 ஓவர்கள் | 3 விக்கெட் |
| மை.கிளார்க் | 17 ஓவர்கள் | 2 விக்கெட் |
| பிரெட் லீ | 26 ஓவர்கள் | 1 விக்கெட் |

**ஆஸி. - (இரண்டாம் இன்னிங்ஸ்)**

| | | |
|---|---|---|
| ஹைடன் | lbw b சகீர்கான் | 13 |
| கடிச் | c லக்ஷ்மன் b ஹர்பஜன் | 34 |
| பொண்டிங் | c லக்ஷ்மன் b சர்மா | 17 |
| ஹஸி | b ஹர்பஜன் | 31 |
| மை.கிளார்க் | c சேவாக் b சர்மா | 6 |
| வட்சன் | b சர்மா | 41 |
| கட்டின் | ஆட்டமிழக்கவில்லை | 35 |
| வைற் | ஆட்டமிழக்கவில்லை | 18 |
| | உதிரிகள் | 33 |
| | மொத்தம் | 6/228 |

**இந்தியா - பந்துவீச்சு**

| | | |
|---|---|---|
| இசாந்த் சர்மா | 14 ஓவர்கள் | 3 விக்கெட் |
| ஹர்பஜன் | 27 ஓவர்கள் | 2 விக்கெட் |
| சகீர்கான் | 17 ஓவர்கள் | 1 விக்கெட் |

**இந்தியா - (இரண்டாம் இன்னிங்ஸ்)**

| | | |
|---|---|---|
| கம்பீர் | b ஜோண்சன் | 29 |
| சேவாக் | c ஹைடன் b கிளார்க் | 6 |
| டிராவிட் | c பொண்டிங் b லீ | 5 |
| டெண்டுல்கர் | c கிளார்க் b வைற் | 49 |
| லக்ஷ்மன் | ஆட்டமிழக்காது | 42 |
| கங்குலி | ஆட்டமிழக்காது | 26 |
| | உதிரிகள் | 20 |
| | மொத்தம் | 4/177 |

**அவுஸ்திரேலியா - பந்துவீச்சு**

| | | |
|---|---|---|
| ஜோன்சன் | 8 ஓவர்கள் | 1 விக்கெட் |
| வைற் | 18 ஓவர்கள் | 1 விக்கெட் |
| ஸ்.கிளார்க் | 11 ஓவர்கள் | 1/விக்கெட் |
| பிரெட் லீ | 11 ஓவர்கள் | 1 விக்கெட் |




# 'பார்முலா – I' கார்ப்பந்தயத்தில் ஸ்பெயினின் அலோன்சா வெற்றி



புஜி, ஒக். 14

'பார்முலா-1' ஜப்பான் கிராண்ட் பிரிக்ஸ் கார் பந்தயத்தில் ஸ்பெயின் வீரர் அலோன்சா வெற்றிபெற்றார்.

'பார்முலா-1' பந்தயம் 18 போட்டிகள் கொண்டதாகும். இதன் 16ஆவது சுற்றான ஜப்பான் கிராண்ட்பிரிக்ஸ் பந்தயம் புஜியில் கடந்த சனிக்கிழமை நடந்தது.

67 சுற்றுக்கொண்ட இந்தப் பந்தயத்தில் ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ அலோன்சா 1:30:21.89 வினாடிகளில் கடந்து முதலிடம் பிடித்தார். அவர் முந்தைய சிங்கப்பூர் கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்திலும் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைவிட 5.2 வினாடிகள் தாமதமாக வந்த போலந்து வீரர் ரொபர்ட் குபிகா 2ஆவது இடம் பிடித்தார். முதலிடத்தில் இருந்துவரும் இங்கிலாந்து வீரர் ஹமில்டன் 12ஆவது இடம் பிடித்தார்.

இதுவரை நடைபெற்று முடிந்த 16 சுற்றுக்கள் முடிவில் இங்கிலாந்து வீரர் ஹமில்டன் 84 புள்ளிகளுடன் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறார். பிரேசில் வீரர் பெலிப் மாசா 79 புள்ளிகளுடன் 2ஆவது இடமும், போலந்து வீரர் ராபர்ட் குபிகா 72 புள்ளிகளுடன் 3ஆவது இடமும், பின்லாந்து வீரர் கிமி ரெய்க்கோனன் 63 புள்ளிகளுடன் 4ஆவது இடமும் வகிக்கின்றனர்.

# சர்வதேச பட்மின்டன் போட்டி; ஜுவாலா இரட்டைப் பட்டம்!

புதுடில்லி, ஒக். 14

பல்கேரியா நாட்டில் உள்ள சோபியா நகரில் பல்கேரியன் கிராண்ட் பிரிக்ஸ் சர்வதேச பட்மின்டன் போட்டி நடந்தது. இதன் கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் ஜுவாலா கட்டா, டி.திஜூ ஜோடி 15-21, 21-18, 21-19 என்ற செட் கணக்கில் இந்தோனேசியாவின் பிரான் குர்னியவான் - ஷெந்தி புஷ்பா ஐதராவதி இணையை தோற்கடித்து சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது.

45 நிமிடங்களில் இந்த ஆட்டம் முடிவுக்கு வந்தது. முன்னதாக கடந்த வாரம் ஜேர்மனியில் நடந்த பிட்பர்கர் கிராண்ட் பிரிக்சிலும் இந்தக் கலப்பு ஜோடி பட்டம் வென்று புதிய வரலாறு படைத்தமை குறிப்பிடத்தக்கது.

ஜுவாலாவுக்கு கடந்த சனிக்கிழமை மேலும் ஒரு மகுடம் கிட்டியது. அவரும் சுருதி குரியனும் இணைந்து பெண்கள் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இந்தோனேசியாவின் ஐதராவதி - மெலியனா இணையை 21-11, 21-19 என்ற நேர் செட்டில் 28 நிமிடங்களில் வீழ்த்தினார்கள்.

ஒரேநாளில் இரண்டு பட்டங்களை வென்று அசத்தியுள்ள 25 வயதான ஜுவாலா இந்த வெற்றிகள் தனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றன என்று கூறினார்.

# எந்த அணியையும் தோற்கடிக்கும் வலுவான நிலையில் இங்கிலாந்து!

## கொலிங்வூட் சொல்கிறார்

லண்டன், ஒக். 13

இங்கிலாந்து அணி தற்போது வலுவாக உள்ளது என்றும், எந்த அணியையும் தாங்கள் தோற்கடிப்பார்கள் என்றும் அந்த அணியின் முன்னணி வீரரான போல் கொலிங்வூட் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற் பந்துவீச்சாளரான ஷேன் வோர்ன் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் 2009 ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணியை அவுஸ்திரேலியா தோற்கடிக்கும் என்று கூறியிருந்தார்.

ஷேன் வோர்னுக்குப் பதில் அளிக்கும் வகையில் இங்கிலாந்து அணியின் ஒரு நாள் போட்டிக்கான முன்னாள் தலைவர் போல் கொலிங்வூட் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், தற்போது வாய்மூலமான வாக்குவாதம் சகஜமாக நடந்து வருகிறது. ஒரு அணியாக இணைந்து எப்படிப் போட்டியில் ஆடுவது என்பதை நாங்கள் அறிவோம். தற்போது நாங்கள் சரியான திசையில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம் என்று நம்புகிறோம் என்றும் போல் கொலிங்வூட் கூறியிருக்கிறார்.

'ஸ்கை ஸ்போர்ட்ஸ்' என்ற தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் ஆஷஸ் தொடர் குறித்து நிருபர் கேட்ட கேள்விக்கு முன்னாள் தலைவரான போல் கொலிங்வூட் மேற்கண்டவாறு பதில் அளித்திருக்கிறார்.

''எங்களது அணியில் அனைவரும் உடற்தகுதி பெற்று சிறப்பாக ஆடும் பட்சத்தில் ஆஷஸ் தொடர் போட்டி வந்தால் எங்களது அணியை தோற்கடிப்பது சிரமம். நாங்கள் நல்ல நிலையில் இருக்கும் போது எந்த அணியையும் தோற்கடிப்போம்'' என்றும் அவர் கூறினார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரைக் கைப்பற்ற கொலிங்வூட் உதவினார். ஆனால் 2006, 2007 ஆம் ஆண்டு தொடரில் அவர் பங்கேற்ற போதிலும், இங்கிலாந்து அணி 5 - 0 என்ற கணக்கில் தொடரை இழந்தது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க அணியை 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்டில் தோற்கடித்த இங்கிலாந்து அணி பின்பு ஒரு நாள் தொடரிலும் அந்த அணியை வீழ்த்தியது. அடுத்ததாக இந்தியா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நம்பிக்கையுடன் பயணம் செய்ய இருக்கிறது.



இது குறித்து கொலிங்வூட்டிடம் கேட்ட போது, எங்களது அணி தற்போது தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது. இந்தக் கால முடிவு நன்றாக உள்ளது. அணியில் உள்ள அனைவருமே தற்சமயம் உற்சாகத்தில் இருக்கிறோம் என்றார்.

''எங்களது அணியில் உள்ள முன்னணி வீரர்களான ஸ்டீவ் ஹர்மிசன் மற்றும் ஆன்ட்ரூ பிளின்டொப் இருவரும் நல்ல உடற்தகுதியுடன் இருக்கின்றமை அணிக்கு நம்பிக்கையளிக்கிறது. இருவரும் விளையாடும் பாணியே வித்தியாசமானது. எங்களது அணியை வெல்வது மிகக் மிகக் கடினம்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சகீர், ஹர்பஜனுக்கு டிராவிட் பாராட்டு

பெங்களூர், ஒக். 14

பெங்களூர் கிரிக்கெட் டெஸ்டில் ஹர்பஜன் சிங் மற்றும் சகீர்கான் ஆகியோர் சிறப்பாக விளையாடினர் என ராகுல் டிராவிட் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

பெங்களூர் டெஸ்டில் 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் டிராவிட், அவுஸ்திரேலிய பந்துவீச்சை ஹர்பஜன் சிங் மற்றும் சகீர்கான் ஆகியோர் திறம்பட சமாளித்து விளையாடினர் எனக் கூறினார்.

இந்த இருவரும் ஜோடிசேர்ந்து 80 ஓட்டங்களைக் குவித்தமை முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் டிராவிட் கூறினார்.

ஆடுகளம் மிகவும் மோசமாக இருப்பதால் இந்த டெஸ்ட் போட்டி எப்படி வேண்டுமானாலும் முடியலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தின் சில காட்சிகள்.
(படங்கள்: நேசன்)

# முக்கோணக் கிரிக்கெட் தொடரில் கொக்குவில் இந்து வென்று அசத்தியது

வலி.வடக்கு, ஒக். 14

நூற்றாண்டை 2010ம் ஆண்டு கொண்டாடவுள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையே இடம்பெற்ற இருபதுக்கு இருபது முக்கோணத் தொடர் கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போட்டி கள்



வெற்றிக்கிண்ணம் பெறும் வீரர்கள்

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜன கல்லூரி 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கபில்தேவ் ஐந்து நான்குகளுடன் 37, கஜதீபன் இரண்டு நான்குகளுடன் 15, காந்தசீலன் இரண்டு நான்குகளுடன் 11 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப் பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் வல்லவக்குமரன் 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பவீந்திரன் 4 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் நிரோசன் 4 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கார்த்திக் 4 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

104 என்ற ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 12.2 ஓவர்களில் 04 விக்கெட்டுக்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்து சம்பியன் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

கோபிகன் ஒரு ஆறு மூன்று நான்குகளுடன் 30, வாகீஸ் ஆட்டமிழக்காது மூன்று நான்குகளுடன் 19, வல்லவக்குமரன் ஆட்டமிழக்காது மூன்று நான்குக ளுடன் 17, துவாரகன் மூன்று நான்குக ளுடன் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மகாஜனாக் கல்லூரி சார்பில் கோகுலன் 2.2 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், விஷ்ணு, திலக்ஷன் தலா 02 ஓவர்கள் பந்து வீசி 18, 17 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அணித் தலைவர் வல்லவக்குமரன் போட்டிகளின் தொடர் ஆட்டநாயகனாகவும் சிறந்த பந்து வீச்சாளராகவும் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த கோகுலதாஸ் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார். (1-86)

## வல்லிபுரக் கோயிலில் இரத்ததான முகாம் நாளையும் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக். 14

வல்லிபுரக் கோயில் தேர்த்திருவிழாவான நேற்று ஆலயத்தில் அடியார்கள் பலர் இரத்ததானம் செய்தனர். தேர் வீதி வலம் வந்த பின்னர் வடக்கு வீதியில் உள்ள கண்ணன் மடத்தில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் அடியவர்களிடம் இருந்து இரத்தம் பெற்றனர். பலரும் தாமாக விரும்பி இரத்ததானம் செய்தனர்.

நாளை கேணித் தீர்த்த திருவிழாவன்று கண்ணன் மடத்தில் தீர்த்த உற்சவம் நிறைவான கையோடு இரத்ததான முகாம் நடைபெறும் என்று இரத்தவங்கி பொறுப்பாளர் வைத்தியகலாநிதி எஸ்.சிவசங்கர் தெரிவித்தார். (அ)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இன்று ஆரம்பமாகின்றது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதுகின்றன. (1)

## வவுனியா பண்டாரிக்குளத்தில் பஸ் சாரதி கலைத்துக் கலைத்துச் சுடப்பட்டுக் கொலை

வவுனியா, ஒக். 14

வவுனியா, பண்டாரிக்குளம் அம்மன் கோயிலுக்கு அருகில் வைத்து நேற்றுமுன் தினம் மாலை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதி ஒருவர் அடையாளந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பண்டாரிக்குளத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் அருட்குமரன் (வயது 32) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வேலை முடிந்து மாலை 6.30 மணியளவில் இவர் மோட்டார் சைக்கிளில் வீடு சென்றுகொண்டிருந்தார். மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் இவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்புவதற்காகத் தான் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு விட்டு இவர் ஓடினார்.

அவரைப் பின்தொடர்ந்து சென்ற ஆயுததாரிகள் சரமாரியாகச் சுட்டனர்.

சூட்டுக்கு இலக்கான இவர் 50 மீற்றர் தூரம்வரை ஓடிச் சென்று கடை ஒன்றினுள் வீழ்ந்து உயிரிழந்தார் என்று கூறப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்தும் சாரதிக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் வவுனியா பஸ் நிலையப் பகுதியில் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

# சர்வதேசத்தில் எழுந்துள்ள நிதி நெருக்கடி இலங்கை அரசின் போரைப் பாதிக்காதாம்!

## அவுஸ்ரேலியாவில் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14

சர்வதேச ரீதியில் உருவாகியுள்ள நிதி நெருக்கடி இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையைப் பாதிக்காது என வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் இருக்கிறோம். தற்போதைய இராணுவ நடவடிக்கையைத் தொடர்வதற்கு எம்மிடம் போதிய நிதி வளங்கள் உள்ளன என நம்புகின்றோம்'' - என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மோதலைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை யென்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஆயுதங்களைக் கீழே வைத்து பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என மேலும் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், விடுதலைப் புலிகள் இதனைச் செய்வதற்கான தருணம் இதுவே எனவும் குறிப்பிட் டுள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவுஸ்திரேலியா தடை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் அமைச்சர் முன்வைத்துள்ளார்.

''இலங்கையில் தமிழ் சமூகத்துடன் அரசியல் தீர்வை எட்டும் முயற்சிகளுக்கு உதவுவதற்காக அவுஸ்திரேலியா விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டிய தருணமிது'' என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு நாங்கள் தீர்வு கண்டு அவர்களைத் தனிமைப்படுத்தி தமிழ் சமூகத்துடன் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இது நல்லதொரு சந்தர்ப்பம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## 20 லொறிகளில் உணவு நேற்று வன்னி புறப்பட்டன

கொழும்பு, ஒக். 14

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கென ஒரு வாரத்திற்கான உணவுப் பொருள்கள் 20 லொறிகளில் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று அத்தியாவசிய சேவைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இருபது லொறிகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள 250 தொன் உணவுப் பொருள்களில் 153 தொன் உணவுப் பொருள்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கும், 97 தொன் உணவுப் பொருள்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் செல்கின்றன.

இவற்றைத் தவிர கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக உணவுப் பொருள்களை விநியோகம் செய்வதற்காக 11 லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சிக்கான வவுனியா இணைப்புக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இடம்பெயர்ந்த மக்களுக்கான அரிசித் தேவையை, அப்பகுதியில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியை விலைக்கு வாங்கி விநியோகிப்பதன் மூலம் நிறைவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

நேற்று அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களில் கோதுமைமா, பருப்பு, சீனி, மரக்கறி எண்ணெய் என்பன உள்ளன என்று கூறப்படுகிறது.

மேலும் 200 தொன் உணவுப் பொருள்கள் அடங்கிய 15 லொறிகள் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளன என்றும் வவுனியா இணைப்புக் காரியாலயம் தெரிவித்துள்ளது. (அ-சி)

## வெலிக்கடையில் துப்பாக்கிச் சூடு மகன் பலி; தாய் படுகாயம்

கொழும்பு, ஒக். 14

கொழும்பு, வெலிக்கடைப் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த தாய் மற்றும் மகன் மீது நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மகன் உயிரிழந்தார். தாய் படுகாயமடைந்தார். தினேஷ் ரணதுங்க (வயது 25) என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவராவார். காயமடைந்த அவரது தாயார் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத நபர்கள் அவர்கள் மீது பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் எதற்காகச் சுடப்பட்டனர் என்பது தெரியவில்லை.

உயிரிழந்தவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரிபாலவின் வாகனத் தொடரணி மீதான தாக்குதல்

# தற்கொலையாளி பாவித்த 'சிம்' அட்டையின் உரிமையாளர் பொலிஸாரிடம் சிக்கினாராம்

கொழும்பு, ஒக். 14

கொழும்பு, பொரலஸ்கமுவவில் கடந்த வியாழக் கிழமை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் வாகனத் தொடரணியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலை நடத்திய தற்கொலைதாரியின் கைத்தொலைபேசி 'சிம்' அட்டையின் உரிமையாளர் பொலிஸாரிடம் சிக்கிவிட்டார் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிஹிந்தலையைச் சேர்ந்த சிங்களப் பெண் ஒருவரின் பெயரிலேயே இச் 'சிம்' அட்டை பதிவு செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்ணிற்கும் தற்கொலைதாரிக்கும் எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது என்று பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் இருந்து தற்கொலைதாரியினது எனக் கூறப்படும் அடையாள அட்டையும் கைத்தொலைபேசி 'சிம்' அட்டையும் பொலிஸாரினால் மீட்கப்பட்டன என்பது தெரிந்ததே. (அ-சி)

தமிழக காங்கிரஸ்தலைவருடன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.



# கருணா எம்.பியானமையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிப்பு

கொழும்பு, ஒக்.14

ஐக்கிய ம க்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகக் கருணா நியமிக்கப்பட்டமையை ஆட்சேபித்து தென்னிலங்கை வாசி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

மொனறாகலை, படல்கும்புற என்ற இடத்தைச் சேர்ந்த வை.ஏ. சோமசிறி என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

ஐ.ம.சு. கூட்டமைப்பில் ஜே.வி.பிக்குரிய தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியைக் கருணாவுக்கு வழங்கியமை தவறு என்று தெரிவித்து அவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் கே.ஸ்ரீபவன், பீ.ஏ. ரத்னாயக்கா ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் பரிசீலனைக்கு எடுத்த பின்னர் தள்ளுபடி செய்தது.

''ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து ஜே.வி.பி. வெளியேறிய நிலையில் அந்த உறுப்பினர் பதவி ஜே.வி.பிக்கு உரியது என்று கோரும் அதிகாரம் ஜே.வி.பிக்கு இல்லை.

''அத்துடன் இது இரண்டு கட்சிகளுக்கு இடையிலான உட்பூசலாகும். இதனுள் நீதிமன்றம் புகுவது அர்த்தமற்றது.

''ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது தேசியப் பட்டியல் உறுப்பினராகக் கருணாவை நியமித்த உத்தரவு அரசு சார்ந்த நிர்வாக நடவடிக்கையோ, நிறைவேற்று அதிகார நடவடிக்கையோ அல்ல.

''ஆகவே இதில் உயர்நீதிமன்றம் தலையிட இடமில்லை.'' - இப்படி பிரதம நீதியரசர் தெரிவித்து, மனுவைத் தள்ளுபடி செய்தார்.

### கருணா கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் இராணுவப் படையிலும் சிவில் பாதுகாப்புப் பிரிவிலும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கு அரசின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆயுதப்பிரிவு உறுப்பினர்கள் தற்போது தங்களுக்கான ஆவணங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். முதல்கட்டமாக இராணுவப் பிரிவில் 300 பேர் ஆயுதப்பிரிவுஉறுப்பினர்களாகஇணைந்து கொள்வர். ஏனைய அனைவரும் படிப்படியாகச் சேர்க்கப்படுவர் என்றும் அவர் கூறியுள்ளார். (அ-சி)

### மின்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது இயங்கும் மின் நிலையங்கள் ஊடாகக் கிடைக்கும் மின்சாரத்தைப் பயன்படுத்தி மின் தடையை குறைப்பது தொடர் பாக அங்கு ஆராயப்பட்டது.

அதையடுத்து -

பரீட்சார்த்தமாக நேற்றிரவு மின் தடை அரை மணி நேரம்மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண நகரமும் பட்டனமும் சூழல்பிரதேசத்திற்கு மாலை 6.10 மணிமுதல் 6.40மணிவரையும் வடமராட்சியில் மாலை 6.20 மணி தொடக் கம் 6.50 மணி வரையும் தென்மராட்சியில் 6.50 முதல் 7.20 வரையும் மின் விநியோகம் தடை செய்யப்பட்டது என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் தென்மராட்சிப்பகுதியில் நேற்றிரவு 6.50 மணி தொடக்கம் 8.15 மணிவரை - 95 நிமிட நேரம் மின் விநியோகம் தடைப்படிருந்ததாக பாவனையாளர்கள் தெரிவித்தனர். இந்த புதிய நேரம் தொடர்பான நடைமுறைகுறித்து இன்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் என மின் சார சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதுவரை80-90 நிமிடங்கள் மின் விநியோகம் தடை செய்யப்பட்டுவந்தது. (அ-1)

இன்றைய எமது புதிய வரவுகள்
G.C.E (O/L) NEW SYLLABUS
ENGLISH MEDIUM MODEL PAPER & ANSWER
MATHS, SCIENCE, ENGLISH, HISTORY
G.C.E (A/L) PAST PAPER
அஸ்ரன் பதிப்பகம் 1999 - 2008
புலமைப்பரிசில் கடந்த கால வினா விடைகள் 1995 - 2008
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் மேலும் கூறப்பட்டது.

அதேவேளை, அன்றையதினம் கிளிநொச்சி, அக்கராயன்குளம் மற்றும் வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற சமரில் விடுதலைப் புலிகளில் 25 பேர் உயிரிழந்தும் 17 பேர்வரை படுகாயமடைந்துள்ளனர் என்றும் தமது தரப்பில் நால்வர் மட்டுமே உயிரிழந்தனர் என்றும் 14 பேர்வரை படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. எனினும், இச்சம்பவம் தொடர்பாக புலிகள் தரப்பில் இருந்து எவ்வித தகவல்களும் வெளிவரவில்லை. (அ-சி)

### உலக உணவுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் மாங்குளம்-ஒட்டுசுட்டான் பாதைக்குப் பதிலாக நெடுங்கேணி வழியாக உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லுமாறு கடந்த வெள்ளிக்கிழமை அரசு அந்த நிறுவனத்துக்கு அறிவித்தது.

எனினும் அந்தப் பாதையூடாக உணவு வாகன அணியைக் கொண்டு செல்வதற்கு அந்த நிறுவனம் இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை. அதனால் அந்த வாகன அணி நிறுத்தப்பட்டுள்ளது - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

### வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் தொடர்வதால் வட பகுதியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது வீடுகளையும் உடைமைகளையும் கைவிட்டு கிளிநொச்சியிலிருந்து கிழக்கு நோக்கி முல்லைத்தீவு பகுதிக்குத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, தற்காலிகத் தங்குமிடம், குடிதண்ணீர், சுகாதார வசதிகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு மேலாக பாதுகாப்பே அவசரமான - அவசிய தேவையாக உள்ளது.

இத்தேவைகளில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் முயற்சியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து ஐ.சி.ஆர்.சி. செயற்பட்டு வருகின்றது. தற்காலிக வாழ்விடங்களை அமைத்துக் கொடுத்தல், சுகாதாரப் பொதிகள், குழந்தை பராமரிப்பு பொட்டலங்கள், நுளம்பு வலைகள், அவசியமான வீட்டுப் பாவனைப் பொருள்கள் அடங்கலான நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வன்னியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை விநியோகிக்கும் தரப்புக்களுக்கு ஐ.சி.ஆர்.சி. ஆதரவளித்து வருகின்றது. அரசு - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடையில் வாகனங்கள், பொது மக்கள் சென்று வருவதற்காக ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்தும் அனுசரணை வழங்கி வருகின்றது - என்றுள்ளது. (அ-சி)

# விடுதலைப்புலிகளால் இந்தியர்கள் தவறாக வழி நடத்தப்படுகின்றனராம்

சென்னை, ஒக்.14

''தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள்ால் எமது இந்திய நண்பர்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றார்கள்'' இப்படிக் கவலை தெரிவித்திருக்கிறார் இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் சி.ஆர்.ஜெயசிங்க.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம அவசர பேச்சுகளுக்காக இந்தியா செல்லவுள்ளார் என வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது எனத் தெரிவித்துள்ள தூதர் சி.ஆர். ஜெயசிங்க, வெளிவிவகார அமைச்சர் இந்தியாவுக்கு அவசரமாகச் செல்ல வேண்டிய அளவுக்கு இப்போதைக்கு முக்கியமான விடயங்கள் எதுவுமில்லை என்றும் கூறினார்.

இணையத்தளமொன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

''விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் இந்திய நண்பர்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிக்கையில் வெளியான கருத்துக்கணிப்பு எவ்வளவு தூரம் சரியானது என்பது கேள்விக்குரியது'' என்றும் அவர் சொன்னார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இரு நாடுகளினதும் அதிகாரிகள் மத்தியிலும் தொடர்பாடல்கள் இடம்பெறுவது நல்லது. இரு அரசுகளினதும் உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் சந்திப்புகள் இடம் பெறுவதை நிராகரிக்க முடியாது. இது வரவேற்கத்தக்க விடயம்.

எனினும் அடுத்த 2 அல்லது 3 நாள்களுக்குள் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இந்தியா வருவதற்கான ஏற்பாடுகள் எவையு மில்லை.

இரு நாடுகளினதும் உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் சந்திப்பு இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. எனினும் இதில் கச்சதீவு விவகாரம் குறித்து மாத்திரம் கலந்துரையாடப்படும் என நான் கருதவில்லை. பரஸ்பர அக்கறைக்குரிய விடயங்கள் அனைத்தும் ஆராயப்படும். கச்சதீவு தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு ஏற்கனவே நன்கு அறியப்பட்டது,1974, 1976 உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டது. - எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

### திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிவளைப்புத் தேடுதல் நடத்தப் பட்டது. பலபேர் தலையாட்டிக்கு முன்பாக நிறுத்தப்பட்டனர். அவர்களில் 10 பேரே கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-சி)

### கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு லொறி பாலத்திற்குள் இறங்கியுள்ளது என்று கூறப்பட்டது.

அந்த லொறியில் உள்ள பொருள்களை இறக்கி லொறியைப் பாலத்திலிருந்து வெளியில் எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏனைய 16 லொறிகளும் புளியங்குளம் பகுதியில் தரித்து நிற்கின்றன.

சேதமடைந்த பாலத்தை உடனடியாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி முல்லைத்தீவு அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இதேவேளை, அத்தியாவசியசேவைகள் திணைக்கள ஆணையாளர் சேதமடைந்த பாலத்தை உடனடியாக புனரமைத்து புளியங்குளத்தில் தரித்து நிற்கும் லொறிகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்.

(முன்னர் வந்த செய்தி 15 ஆம் பக்கத்தில்)

### இந்தியாவுக்கும் இலங்கைக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத் தமிழருக்கு ஆதரவான எழுச்சி அலை தமிழகத்தில் புதுப் பிரவாகம் எடுக்கத் தொடங்கியுள்ள பின்னணியில் -

இவ்விடயத்தில் அதிக சிரத்தையும், கரிசனையும் கொண்டு செயற்பட வேண்டிய அரசியல் கட்டாயம் புதுடில்லியில் மத்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இவ்விவகாரத்தை ஒட்டி தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூட்டியுள்ள சர்வகட்சி மாநாடு இன்று சென்னையில் தமிழக மாநில அரசின் தலைமைச் செயலகத்தில் நடைபெறுகின்றது.

அதேவேளை, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக அ.தி.மு.க. தலைவி செல்வி ஜெயலலிதா இன்று அடையாள உண்ணாவிரதம் இருக்கின்றார்.

இவ்வாறு தமிழகத்தில் இவ்விடயம் சூடு பிடித்துள்ளதை அடுத்து, அதனால் எழக்கூடிய அரசியல் சர்ச்சைகளைச் சமாளிக்கும் காய் நகர்த்தலாக, புதுடில்லி, கடந்த வாரம் அங்குள்ள இலங்கையின் துணைத் தூதுவரை அழைத்து ஈழத் தமிழர் தொடர்பான தனது கரிசனையையும் கவலையையும் அவர் ஊடாகக் கொழும்பு அரசுக்குத் தெரிவித்தது என்பது தெரிந்ததே.

**மஹிந்த இந்தியத் தூதுவரிடம் சீறினார்**

இந்த நடவடிக்கை கொழும்பைச் சீற்றமடைய வைத்திருப்பதாக அறிய வருகின்றது.

இதனை அடுத்து, அடுத்தநாள் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் அலோக்பிரசாத்தை தமது அலரிமாளிகை இல்லத்துக்கு அழைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இவ்விடயத்தை ஒட்டி சீற்றத்தோடு - உரத்த குரலில் சில கருத்துகளைக் கூறினார் என்று தெரிகின்றது.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் உடனிருந்தார் எனக் கூறப்பட்டது.

''பயங்கரவாதிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்காமல், ஜெனரல் ஜானக பெரேரா போன்றவர்கள் கொல்லப்படுவதை நாங்கள் (இலங்கை அரசு) கைகட்டிப் பார்த்திருக்கவேண்டும் என உங்களின் அரசு (இந்தியா) எதிர்பார்க்கின்றதா?'' - என்று சீற்றத்தோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கேட்டாராம்.

அவர் அன்று உச்ச ஸ்தாயியில் தெரிவித்த கருத்துக்களை, சிரிப்புடன் செவிமடுத்த இந்தியத் தூதுவர் அவற்றை அப்படியே புதுடில்லிக்குத் தெரியப்படுத்தினார் என்றும் -

அதனால் புதுடில்லி அதிருப்தி அடைந்துள்ளது என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரத்தை ஒட்டித் தொடராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து புதுடில்லியில் இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் தலைமையில் இராஜதந்திரக் குழுக்கள் ஆராய்ந்து வருகின்றன என்றும் -

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதில் புதுடில்லியுடன் ஒத்துப்போய் சாதகமான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, முரண்டு பிடிப்பதில் கொழும்பு தீவிரமாக உள்ளது என்ற கருத்து புதுடில்லி அதிகார பீடத்தில் நிலவி வருகின்றது என்றும் - கொழும்பின் தற்போதைய போக்குக் குறித்து எம்.கே.நாராயணன் அதிகம் விசனம் கொண்டுள்ளார் என்றும் - மேலும் அறியவந்தது. (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org